தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு. | வெளிநாடு மூன்றணு | அலுவலகம் : 'தென்றல்' சென்னை-6.

மலர் 3 | சென்னை | 9-2-57 | சனிக்கிழமை | இதழ் 23

விலை போகாத வி.... ச..ம்!

பொதுவுடமை முகாமில் புதிய வழுக்குமரம்!

"தி. மு. கழகம் தேர்தலில் பெருவாரியான இடங்களில் போட்டியிடுவது காங்கிரசின் வெற்றிக்கு வழி வகுத்துக் கொடுக்குமாம் — கம்யூனிஸ்டுகள் சொல்லுகிருர்கள். வேடிக்கையாக இருக்கிறது. இதை மக்கள் மத்தியில் சொல்லுவதற்கு அவர்களுக்குத் துணிவு பிறந்திருப்பதற்குக் காரணமே, தமிழகத்தில் நாம் வளர்த்திருக்கும் நாகரிகமும் கண்ணியமுமே ஆகும்.

"போன தேர்தலில் அவர்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை அவர்கள் நழுவ விட்டு விட்டதை அவர்கள் மறந்துவிட்டார்கள். மக்கள் வைத்திருந்த நம்பிக்கையை நாசமாக்கிவிட்டார்கள். அதைச் செய்வார்கள் இதைச் செய்வார்கள் கம்யூனிஸ்டுகள் என்று எதிர்பார்த்துக் கிடந்த மக்கள் இப்போது, அவர்கள் செல்லுமிடந்தோறும் முகத்திலே கரிபூசி அனுப்புகிருர்கள் அதனுல் பிறக்கும் ஆத்திர உணர்ச்சியால் நம்மீது பாய்கிருர்கள், அநாகரீகமாகப் பேசுகிருர்கள். இந்தத் தேர்தலில் வெற்றி பெற்ருல் இந்த நாட்டைப் பூங்காவாக்கி விடுவோம் என்கிருர்கள். அந்தோ பரிதாபம்! போன தேர்தலின்போது கம்யூனிஸ்டுகள் தங்களைக் கம்யூனிஸ்டுகள் என்று பகிரங்கமாக அழைத்துக் கொண்டார்கள். ஆனுல் இந்தத் தேர்தலில் அது பலிக்கவில்லை. விலைபோகாத 'விஷப் பொருளா'கிவிட்டது. இப்போது அவர்களின் அமைப்பு வி....ச..ம்! அதாவது **விவசாயச் சங்கம்.** தென் மாவட்டங்களில் எல்லா இடங்களில் கம்யூனிஸ்டுக் காரியாலயங்களிலும் வி. ச. பொறித்த சிகப்புக் கொடிகளே

பட்டமங்கலம் பொதுக்கூட்டத்தில் தென்னரசு

பறக்கின்றன. எங்கே அந்த அரிவாளும், சுத்தியும்? ரஷ்யச் சிலைக்கு சீனத்து மந்திரம் எப்படி வந்தது? 'பாட்டாளி மக்கள்' என்று 'கர்ஜித்தார்'கள்! தமிழ் நாட்டில் எத்தனை ஆயிரம் பாட்டாளிகள் இருக்கிருர்கள்? அவர்களில் எத்தனை சதவிகிதத்தினர் இவர்களைப் பின்பற்றிஞர்கள்? பாட்டாளிகளின்பால் இருந்த அன்பு எப்படி விவசாயிகளின் பக்கம் திரும்பியது? மர்மமென்ன? தமிழ் நாட்டில் ஆலைகள் இல்லை! தென்னுட்டில் ஆலைகளில்லையே என்றுடில்லியைத் தட்டிக் கேட்க கம்யூனிஸ்டுக் கட்சிக்குத் திராணியில்லை! இந்தியாவின் ஏகோபித்த சக்தி குன்றிவிடுமாம்! எனவே தான் அவர்கள் விவசாயிகள் பக்கம் திரும்பிஞர்கள்! சீனுவைப் பார் என்ருர்கள்! அதிலேயும் கம்யூனிஸ்டுகள் வழுக்கி விழுந்தார்கள். விவசாயப் பெருமக்களுக்கு வழிகாட்டியாகக் கட்சியை அவர்கள் வளர்த்துக் கொள்ளவில்லை. 'தேவை'யில் சிக்கித் தவிக்கும் விவசாயிகள் தங்கள் இஷ்டப்படி கட்சியை இழுத்துச் செல்லும் 'ஜவ்'வாகக் கட்சியை மாற்றிக் கொண்டார்கள். அதன் விளைவு 'தற்கால சாந்தி'க்காக கம்யூனிஸ்டுகள் விவசாயிகளைப் பயன்படுத்திக் கொள்கிருர்கள் என்ற உண்மை வெளியாகி விட்டது. மறைக்க முடியவில்லை கம்யூனிஸ்டுகளால்! இந்த 'அரசியல் பூர்ஷுவா'த்தனத்தை நாம் தகர்த்தால் நம்மீது பாய்கிருர்கள்! நாம் காங்கிரசின் வெற்றிக்கு வழி அமைத்துக் கொடுக்கிருேமாம்! அவதூறு! அவதூறு! பெரும்பெரும் கம்யூனிஸ்டுத் தலைவர்களெல்லாம் சட்டசபைக்குப் போகக்காத்துக் கிடப்பது போல அவர்கள் நடிக்கிருர்கள். போன தேர்தலில் வெற்றி பெற்றுப் போகாத கம்யூனிஸ்டுத் தலைவர்கள் யார்?

ராமமூர்த்தி - வெற்றிபெற்ருர்
ஜீவானந்தம் - வெற்றிபெற்ருர்
மணலி - வெற்றிபெற்ருர்
கல்யாண சுந்தரம் - வெற்றிபெற்ருர்
அனந்த நம்பியார் - வெற்றிபெற்ருர்
ஏ. கே. கோபாலன் - வெற்றிபெற்ருர்

யார் போகவில்லை? இந்தத் தேர்தலிலே யாரைப் புதிதாக அனுப்பக் கம்யூனிஸ்டுக் கட்சி துடிக்கிறது? ஒரு கோவிந்தசாமி, ஒரு ஆத்தூர் சுப்ரமணியம், ஒரு திருவொற்றியூர் சண்முகம் ஆற்றிய பணி இத்தனை தலைவர்களும் சேர்த்துப் பார்க்கவில்லை. புதிய கல்வித் திட்ட எதிர்ப்பின் போது ஒளிந்துகொண்ட கம்யூனிஸ்டுகள். இந்தி மொழியை எதிர்த்தபோது மறைந்து கொண்ட கம்யூனிஸ்டுகள் இனி என்ன சாதிக்கப் போகிருர்கள்? நாட்டோரே யோசித்துப் பாருங்கள்! கோபால் ரெட்டியை முதலிலே தோற்கடித்த கம்யூனிஸ்டுகள் தானே இடைத் தேர்தலில் அதே கோபால் ரெட்டியைப் பிரதமராக விட்டார்கள்! ஆந்திராவில்! இது எவ்வளவு பெரிய நம்பிக்கைத் துரோகம்! ஆகவேதான் தமிழ்நாட்டில் யாரையும் எந்தக் கட்சியையும் நம்பிப் பயனில்லை என்று, தானே போட்டியிடத் தீர்மானித்து விட்டது தி. மு. கழகம். இந்த நேரத்தில் பலர் பலவிதமாகப் பேசுவார்கள். பல ஆண்டுகளாக நீங்களே கட்சியை வளர்த்து வந்திருக்கிறீர்கள்! காங்கிரஸ் கட்சியைப் பற்றி நாம் சொல்லவேண்டாம்! அனுபவமுண்டு தமிழ் மக்களுக்கு! நமது தாய்நாட்டுக் கட்சி நிற்கிறது! கையேந்தி நிற்கிறது! மானம் காப்போம்! தி. மு. க. வின் எழுச்சிக் குரலைச் சட்டசபையில் ஒலிக்கச் செய்யுங்கள்"

—என்று 25-1-57ம் தேதியன்று பட்டமங்கலம் தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் தோழர் எஸ். எஸ். தென்னரசு அவர்கள் குறிப்பிட்டார்கள். கூட்டத்தில் ஆசிரியர் கண்ணதாசனும் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றிஞர்.

—ந. தி.

கழகமா ? காங்கிரசா ?

— சென்ற இதழ்த் தொடர்ச்சி —

தங் : ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற உண்மை நெறிப்படி இயங்குகிறது எங்கள் கழகம். அந்தத் தேவனுக்குக் கோயில் கட்டாது.பூசாரி வைத்து மணியாட்டச் செய்யாது. அவரவர்களின் உள்ளங்களிலேதான் அந்தத் தேவன் வசிப்பான். அவன் அன்பாகவும், உண்மையாகவும், தூய்மையாகவும், பரந்த எண்ணமாகவும் இப்படியாக ஏதோ ஒரு நல்ல பண்பாகத்தான் இருப்பான். இப்பப்புரியுதா தாத்தா நாங்க எந்தச் சாமியை வெறுக்கிரேமின்னு ?

இரு : நீ சொல்றதும் உண்மையாத்தான் படுது. நானும் என் வாழ்நாளில் இந்தச் சாமிகளுக்கு ஒரு இருநூறு ருபாயாவது செலவு செய்திருப்பேன். வருசா வருசம் சாமிக்குக் காவடி எடுத்து வந்தேன். அதுலே கொடிச்சிப்போனவன்தான் இன்னும் மேடேற முடியாம முழிக்கிறேன்.

தங் : இப்படியெல்லாம் ஏன் வினை வழிகளில் உங்க வாழ்நாளைப் போக்குறீங்க, நல்லா புத்தியாப் பிழைச்சுப் போங்கன்னு எங்க கட்சிக்காரங்க சொன்னா எங்களைத்தான் திருப்பி வையுறது; இது போன்ற பல கருத்துக்களை பலர் பலவிதமாகத் திருத்திக் கூறி வினை எங்கமேல் வெறுப்புக்கொள்ளும்படிச் செய்யுறாங்க. சரி இன்னொன்னு தாத்தா, மனிதர்களாகப் பிறந்த நாமெல்லாம் ஒரே குலம், நமக்குள் 'ஜாதி' கூடாது, பேதம் ஆகாதுன்னு சொல்றதெல்லாம் குற்றமா தாத்தா ?

இரு : சரி இதெல்லாம் இருக்கட்டும். காங்கிரஸ்காரங்க 'ஓட்' கேக்கிற போது அது செய்யுறோம் இது செய்யுறோம் என்றெல்லாம் சொல்லி, கடைசிக்குக் கட்டிக்கிற வேட்டி இல்லாம, படுத்துக்கிற குடிசை இல்லாம செஞ்சிபோட்டாங்க. இப்ப நீங்க வந்து ஓட் கேக்குறீங்க. நீங்க நாளைக்கு என்ன செய்யப்போறீங்க.

தங் : தாத்தா முதல்ல நீங்க இப்ப இருக்கிற அரசியலமைப்பத் தெரிஞ்சுக்குங்க. இந்தியா பல்வேறு நாடுகளைக்கொண்டது தாத்தா. அதில் சிக்கி நம்ம திராவிட நாடும் துன்பப்படுது.

இரு : என்ன, பல நாடுகளா ? இந்தியா தேசம் ஒரே தேசம்தானப்பா.

தங் : அப்படித்தான் தாத்தா எல்லா காங்கிரஸ்காரரும் சொல்லுவாங்க. ஆனால் அந்த வார்த்தை அவங்க நெஞ்சிலிருந்து வராது. உதட்டிலிருந்துதான் அது புறப்படும்.

இரு : அப்புறம் ?

தங் : காங்கிரசு காங்கிரசுன்னு நீங்ககூடக் கொஞ்ச காலத்து முன்னாலே ரெம்ப அக்கறை காட்டியிருப்பீங்க. ஆனால் உண்மை என்னன்னா அது நமது கட்சி இல்லை. அதனுடைய தலைவரும் நம்ம நாட்டுக்காரரில்லை!

இரு : அப்படீன்னா ஜவஹர்லால் நேரு நம்ம நாட்டுக்காரரில்லையா ?

தங் : ஆமா தாத்தா, ஆமா, அவரு வேறு, நம்ம வேறு. அவருடைய பேச்சு, பழக்கவழக்கம், உடை, உணவு எல்லாம் நம்மிடத்திலிருந்து வேறுபட்ட தன்மைதான். எங்கேயோ இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பாலிருக்கிற காங்கிரஸ் கட்சிக்காக இங்கிருக்கிற அப்பாவிகள் தங்களை பலி கொடுக்கிறாங்க. வாழ்கிறதெல்லாம் வடநாடுதான்-அதுதான் காங்கிரஸ்காரரு நாடு. இதை நல்லா ஞாபகத்திலே வச்சிக்குங்க.

இரு : அப்ப காங்கிரஸ் கட்சின்னு சொல்லப்பட்ட ஒரு வேற்று நாட்டுக் கட்சி நம்மையெல்லாம் அடக்கி ஆளுதுன்னு சொல்லு.

தங் : நாங்க மட்டும் சொல்லல்லே தாத்தா. உண்மையான நெஞ்சுடையவங்க எல்லாம் இப்படிச் சொல்லத்தான் செய்வாங்க. ஐந்தாண்டுத் திட்டமின்னு நீங்க கேள்விப்பட்டிருப்பீங்க. முதல் திட்டத்தில செலவு செய்தது இரண்டாயிரம் கோடி ருபாய். அதுலே நம்ம நாட்டுக்குக் கிடைச்சது பிச்சைக்காசுபோல நூறே நூறு கோடி ருபாய்தான் தாத்தா.

இரு : என்ன இரண்டாயிரம் கோடியில் நூறு கோடிதானா ?

தங் : அந்த வேதனையை ஏன் கேக்குறீங்க, இரண்டாவது திட்டத்தில் மொத்தத் தொகை ஆறாயிரம் கோடி ருபாய். அதுலே நமக்குக் கிடைக்கிறது நூத்தியெழுபது கோடிதான் தாத்தா.

இரு : என்னப்பா அநியாயமா இருக்கு !

தங் : ஏன்னு கேட்டா பேதம் பேசுறவங்க, வாதம் புரியுறவங்கன்னு சொல்லத்தான் முடியுமே தவிர அவங்களால் சரியான பதில் சொல்ல முடியாது. நமக்கு இரண்டு சர்க்கார் தாத்தா. ஒன்னு டெல்லியிலே. அதிகாரமெல்லாம் அதனுடைய கையில்தான். இன்னொன்னு சென்னையிலே. இது டெல்லிக்கு எடுபிடி ஆள் மாதிரி. இங்கே கவர்னருன்னு ஒருத்தரு இருக்காரு தெரியுமா ? அவருக்குச் சம்பளம் எவ்வளவுன்னு தெரியுமா ?

இரு : தெரியாதே.

தங் : தாத்தா உண்மையில் அந்தப் பதவி அனாவசியமானது. அப்படிப்பட்ட பதவிக்காரருக்குச் சம்பளம், தாத்தா, சொல்லக்கூட உடல் நடுங்குது, ஒரு நாளைக்கு மூவாயிரம் ருபாய் !

இரு : (திடுக்கிட்டு) என்ன ஒரு நாளைக்கு மூவாயிர ருபாயா ? அதுவும் அவசியம் இல்லாத பதவிக்காரருக்கா ?

தங் : அந்த மூவாயிர ருபாயைக் கொண்டு, முப்பது குடும்பங்களைக் கொண்ட நூறு கிராமங்களுக்கு நல்ல வாழ்வளிக்கலாம் தாத்தா! நூறு கிராம மக்களின் வயிற்றில் மண்ணடிக்குது தாத்தா அந்தப் பதவி.

இரு : கேட்கக்கூட மனசு பொறுக்கமாட்டேங்குதப்பா. இதெல்லாம் காங்கிரசுக்காரங்க செய்யிற நல்ல காரியங்கள் போலிருக்கு! இதைக் கேட்க நாதியில்லையா ?

தங் : யார் இருக்கிறார்கள், எங்கள் கட்சியைத் தவிர ? எங்க கட்சி இந்த நாட்டுக் கட்சி; இந்த நாட்டு மக்களுக்காக அல்லும்பகலும் பாடுபடுது. அதனுடைய ஒப்பற்ற தலைவர் **அண்ணா** இம்மண்ணில் பிறந்து வளர்ந்தவர். அதனுடைய தூண்கள் போலிருக்கும் **நெடுஞ்செழியன், சம்பத், கண்ணதாசன், கருணாநிதி** ஆகிய கடமை வீரர்கள் பிறந்து வளர்ந்தது இந்நாடு. அவர்களுக்குத்தானே இந்த நாட்டைப் பற்றிய கவலை, இந்த நாட்டைப்பற்றிய இரத்த பாசம் இருக்கும். வேற்று நாட்டுக்காரர்கள் ஏன் கவலைப்படப் போகிறார்கள் ?

இரு : சொல்லு தம்பி, நல்லாச் சொல்லு! உங்க கட்சியைப் பற்றி நல்லாச் சொல்லு.

தங் : சமீபத்தில் நடந்த தஞ்சாவூர் புயலைப் பற்றி உங்களுக்குத் தெரியும். மக்கள் வீடிழந்து தெருவில் நிற்கும்போது நேரு வந்தாரா? வந்து ஆறுதல் சொன்னாரா? அவரு ஏன் வரப்போறாரு? அவருடைய நாடு வேறு. அதனால்தான் வரல்லே. அந்தப் புயலில் சிக்கினவர்களுக்காக ஓடியோடி நிதி திரட்டியது எங்கள் கழகம். ஒவ்வொருவரும் ஒன்பதினாயிரம்,பத்தாயிரம் கொடுத்து எவ்வளவு உதவி செஞ்சாங்க தெரியுமா? நெசவாளிகளின துயர் துடைப்பதற்காக எங்க ஒப்பற்ற தலைவர் அண்ணா அவர்கள் கையில் துணியேந்தி தெருத்தெருவாகத் "துணி வாங்குங்கள்" என்று கூவி விற்றார். ஏனென்றால் அவர் இந்த நாட்டுக்காரரு. கஷ்டப்படுற நெசவாளிகள் இந்த நாட்டு மக்கள். இதைப் பொறுத்தெல்லாம் காங்கிரஸ் கட்சி-வேற்று நாட்டுக் கட்சி எந்தவிதக் கவலையும் கொள்ளக்கிடையாது. அரியலூர் ரெயில் விபத்தில் நூற்றைம்பது பேர் மாண்டுமடிஞ்சாங்க. அப்போ நேரு வந்தாரா? வேதனைப்படுகிற மக்களுக்கு ஆறுதல் சொன்னாரா ? கிடையாது. காங்கிரஸ் சர்க்காரின் ஊழலைப் பற்றிச் சொன்னா பெரிய கதையே ஆகிவிடும் தாத்தா. எல்லாவற்றிலும் ஊழல், இலஞ்சம். உண்மையா என் நெஞ்சைத் தொட்டுச் சொல்றேன். இந்தக் காங்கிரஸ் ஆட்சியின் பிடியிலிருந்து விடுபட்டு 'நம் நாடு' தனி நாடானாத்தான் நமக்கெல்லாம் வாழ்வு. இல்லாவிட்டால் நாமெல்லாம் தொலைந்தோம்.

இரு : மெய் தம்பி ! நீ சொல்றதுதான் நல்ல வழி.

தங் : (தி. மு. க. தேர்தல் சின்னத்தைக் காட்டி) இந்தச் சின்னம்தான் எங்க கட்சிக்காரரு. எங்க கட்சிக்காரருக்குத்தான் நீங்க 'ஓட்' போடணும்.

இரு : அவசியம் போடுறோம் தம்பி. நம்ம நாட்டுக் கட்சிக்கு, நமக்காகப் பாடுபடுகிற கட்சிக்குத்தான் 'ஓட்'போடணும். இதைப் பற்றி இந்த கிராமம் முழுவதும் சொல்றேன். இந்த கிராமத்து மக்களெல்லாம் இந்தக் கட்சிக்குத்தான் 'ஓட்' அளிப்பாங்க. நீ போயிட்டுவா தம்பி.

தங் : ரொம்பவும் நன்றி தாத்தா. போயிட்டு வர்றேன். வணக்கம் தாத்தா.

காட்சி : 3.

[நாட்டாண்மைக்காரர் சுருளிமலை வருகிறார்.]

சுரு : இருளாண்டி தேர்தல் வருகுது. நீங்க எங்க காங்கிரஸ் கட்சிக்கு ஓட் போடணும்.

இரு : (கோபத்துடன்) போங்க நாட்டாண்மைக்காரரே. போனதடவை மாதிரி எட்டணாவைக் கொடுத்து எங்களையெல்லாம் ஏமாத்த முடியாது. நீங்க நூறுநூறாகக் கொட்டினாலும் உங்க பணம் குப்பைக்குச் சமம். இந்தக் கிராமத்து மக்கள் 'ஓட்'டெல்லாம் (உதய சூரியனைக் காட்டி) இந்தக் கட்சிக்காரருக்குத்தான். இதுதான் இந்நாட்டுக்கட்சி. இந்நாட்டுக்காகப் பாடுபடுவது. நீங்கள் போகலாம்.

[உதயசூரியனைக் கண்டவுடன் சுருளிமலையின் முகம் கறுத்து விடுகிறது.]

சுரு : (மெல்ல நகர்ந்து கொண்டே தனக்குள்) இந்தக் கழகத்துக்காரங்க மக்களிடத்தில் பரவிட்டாங்க. இந்தத் தேர்தலில் காங்கிரஸ் 'ப்ல்டி'தான். இதில் சந்தேகமே இல்லை ! நமக்கென்ன தேர்தல் பிரச்சாரத்துக்காக அவரிடத்தில் நூறு ருபாய்வாங்கினேன். வாங்கின கடனுக்கு ஏதோ தேர்தல் வரை சொல்லிப் பார்க்கலாம். என்னத்தைச் சொன்னாலும் எவன் காங்கிரசுக்கு 'ஓட்' போடப்போறான் ? இந்தத் தடவை 'கோவிந்தா' தான். நல்லவேளை, இந்தத் தொகுதிக்கு நான் காங்கிரஸ் அபேட்சகனாக நிற்காமல் போனேன். அந்த அளவில் நான் பிழைத்துக்கொண்டேன் ! ★

(காட்சி முடிவு)

குறள்மாறன்

" போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் : அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 3 ‖ 9-2-57 ‖ இதழ் 23

பண்டிதரின் பேச்சு !

நேரு பண்டிதர் பவனி வந்தார். சென்னை நகரத்தின் ராஜ பாட்டைகளில் ஒய்யாரமாகச் சென்றார். சென்னை மாநிலத்துக் காங்கிரஸ்காரர்களின் நெடுநாள் ஆசையைத் தனது வருகையின் மூலம் பூர்த்தி செய்துவிட்டிருக்கிறார் அந்தப் 'புண்ணியவாளர்'! ஆம்! தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரச்சாரத்தை அவர் துவக்கம் செய்த நிகழ்ச்சியைத்தான் குறிப்பிடுகிறோம். தேர்தல் பிரச்சாரத்திலே பண்டிதர் தன் கட்சியின் பல தவறுகளை உணர்ந்து ஒப்புக்கொண்டிருக்கிறார். 'தவறுகளை ஒப்புக் கொள்ளுகிறேன்' என்று வெளிப்படையாகக் குறிப்பிட்டிருக்கிறார். என்றாலும் அவருக்கே உண்டான இயல்பான பிடிவாத குணத்தையும் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்.

"அபேட்சகர்களைப் பொறுக்கும் விஷயத்தில் பல தவறுகள் இருக்கலாம். ஆனால் அதைப் பெரிதாக எண்ணிக் கொள்ளக்கூடாது. கட்டுப்பாடாக இருக்கவேண்டும். தகுதியுள்ள பலர் நியமனம் செய்யப்படவில்லை. ஆனால், தகுதியற்ற பலர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். மிகுந்த கவனம் செலுத்தியும் இத்தவறுகள் ஏற்பட்டுள்ளன.

"மத்திய தேர்தல் கமிட்டி பொறுக்கி எடுத்துள்ள பலரை எனக்குப் பிடிக்கவில்லை என்பதை பகிரங்கமாகக் கூறுகிறேன்."

—உச்ச 'ஸ்தாயி'யிலே பேசி வரும் பண்டிதரின் பேச்சு இந்த இடத்தில் கீழ் 'ஸ்தாயி'யில் இறங்கியிருக்கிறது. உண்மையிலேயே, தகுதியற்றவர்கள் அபேட்சகர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்ளும் நேரு பண்டிதர், எந்த அடிப்படையிலே அந்தத் தகுதியற்றவர்களுக்கு 'ஓட்' கேட்கிறார் என்பது நமக்குப் புரியவில்லை. கண் இருந்தும் கிணற்றிலே விழச் சொல்கிறார் நேரு பண்டிதர். தன் கட்சியின் 'பிரதாபம்' இந்த விதத்திலே அமைந்திருக்கும் போது, நேரு பண்டிதர் அதை உடனே மறந்துவிட்டு, திராவிடர் இயக்கத்தைப் பற்றிக் குறைவாகப் பேசியிருப்பது உண்மையிலேயே நமக்கு வேதனையைத் தருகிறது. குறை கூறியது குழந்தையாக இருந்தால் நாம் மறந்துவிடலாம். ஆனால் குறைகூறிய கோமகனார் இந்தியப் பிரதமர் என்பது மட்டுமல்ல, சிறந்த வரலாற்றாசிரியர் என்பதும் நமக்கு நினைவிலிருக்கிறது. மனித சமுதாயத்தின் வளர்ச்சியையும், பிரிவினை மனப்பான்மையின் இன்றியமையாமையையும் பாராட்டும் வரலாற்றாசிரியர் திராவிட இயக்கத்தின் போராட்டத்தைத் தரக் குறைவாகப் பேசியதை எண்ணும் போது, பண்டிதர் தான் படித்த வரலாற்று நூலையும் எழுதிய வரலாற்று நூலையும் மறந்துவிட்டாரோ என்று தோன்றுகிறது நமக்கு.

"திராவிடக் கட்சிகள், மனிதர்கள் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த காலத்திற்குத் திரும்பச் செல்லுகின்றன"

—என்று பொருளற்ற முறையிலே குறிப்பிட்டிருக்கிறார் நேரு பண்டிதர் சென்னைக் கூட்டத்தில்.

அடிமைப் பிடியிலிருந்து, அடிமைப்பட்டவர்கள் மீளவேண்டும்—மீண்டு நல்வாழ்வு பெற வேண்டும் என்று கேட்பது காட்டுமிராண்டிக் காலத்திற்கு இழுத்துச் செல்வது என்று பொருளா? பண்டிதரின் அகராதி இப்படித்தான் கூறுகிறதா? சமுதாய வளர்ச்சி, நாட்டுப் பிரிவினை முதலியவற்றை அலசிப் பார்த்தவர் என்று புகழப்படும் நேரு பண்டிதருக்கு ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

பாகிஸ்தான் பிரிவினையின் போது அதை எதிர்த்தவர்கள் பலர். என்றாலும் அந்தப் பிரிவினை நடைபெறத்தான் செய்தது. பண்டிதர் கூட உடன் இருந்து பார்க்கத்தான் செய்தார். அந்த மாபெரும் நிகழ்ச்சியை நேரு பண்டிதர் மறந்துவிடுவதற்கில்லை. அதுபோல திராவிட நாடு பிரிவினையும் கட்டாயம் நிறைவேறத்தான் போகிறது. நேரு 'பெருமானும்' இருந்து பார்க்கத்தான் போகிறார்.

காலவெள்ளத்திலே — மக்களின் உணர்ச்சியிலே — பண்டிதரின் பேச்சு காற்றிலே பறக்கும் உமியைப்போல் பறந்துவிடும் என்பதை நாம் குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை. ★

முல்லை
இலக்கியத் திங்களிதழ்
ஆசிரியர்:-
கண்ணதாசன்
தை இதழ் எங்கும் விற்பனையாகிறது !

தோழா ! தோழா !...

— 6ம் பக்கத் தொடர்ச்சி —

அஸ்ஸாம் மாநிலம்

1. காமரூப் ஜில்லா, பெல்டோல் பிரதேசத்தில் 1949 ம் ஆு பிப்ரவரி மீ 3 ம் வாரத்தன்று கம்யூனிஸ்டுகள் வரிகொடா இயக்கத்தைத் தொடங்கிய சமயத்தில், மலைஜாதியினரைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கோஷ்டியொன்று ஒரு சௌக்கிதாரை, தம் எஜமானரின் தானியக்களஞ்சியங்களுடைய சாவிகளைத் தரும்படி உத்தரவிட்டனர். சௌக்கிதார் அவ்வாறு செய்ய மறுக்கவே, அவர் உடனே சுட்டுக் கொல்லப்பட்டார். அவரைக் காப்பாற்ற வந்த அவருடைய மனைவியும், குறிவைத்துச் சுடப்பட்டதால் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது.

2. டிப்ருகார், லட்சிம்பூர் ஜில்லா, நாலியாபூர் ரயில்வே காலனியில் 1949 ம் ஆு ஜூலை மீ 16 ம் தேதி ஐ. பி. டி. ஏ. சமாதான மகாநாடு நடந்துகொண்டிருந்தபோது, வெளியார் சிலர் உள்ளே புகப் பார்த்தனர். மகாநாட்டைக் காவல் புரிந்துவந்த கம்யூனிஸ்டுத் தொண்டர்கள் உள்ளே அனுமதிக்க மறுக்கவே, இரு சாராருக்கும் அடிதடி ஏற்பட்டது. தொண்டர்கள் வெளியாரைக் கடுமையாகத் தாக்கிவிட்டனர். இது சம்பந்தமாக ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. மறுநாள், இதைப் பற்றி விசாரிக்க போலீசார் சென்றபோது, அவர்கள் வளைத்துக்கொள்ளப்பட்டுத் தாக்கப்பட்டனர். போலீஸ் கோஷ்டியைச் சேர்ந்த எல்லோரும், பலத்த காயங்களுக்காளாயினர். போலீஸ் சப் இன்ஸ்பெக்டரும் தாக்கப்பட்டார். கம்யூனிஸ்டுகள் அவருடைய வாயில் அமிலத்தை ஊற்றி, பிரேதத்தை ஒரு சாக்கடையிலே மலத்தினடியில் புதைத்துவிட்டிருந்தனர். மறுபடியும், புதிதாகப் போலீஸ் படைகள் வந்தபோதும், அவர்கள் மீது ரசாயன வெடிகுண்டுகளையும் மற்ற எறி ஆயுதங்களையும் வீசித் தாக்கினர்.

3. ஆம்குரி, காம்டியாலி ரயில்வே ஸ்டேஷன்களுக்கிடையே. 1949 ம் ஆு செப்டம்பர் மீ 11-ந் தேதி மெயில் ரயில் முந்திய ஸ்டேஷனில் நின்றபோது, ஆயுதபாணிகளாக அநேக கம்யூனிஸ்டுகள் அதில் ஏறிக்கொண்டனர். ரயில் ஓடிக்கொண்டிருக்கும்போது அவர்கள் அதைத் தாக்கி, சம்பளக் குமாஸ்தாக்கள் பலரைச் சுட்டுக் கொன்று, ஒரு சௌக்கிதாரை ரயிலிலிருந்து தள்ளிவிட்டு, அவரிடமிருந்த துப்பாக்கியைப் பிடுங்கிக் கொண்டனர். அபாய அறிவிப்புச் சங்கிலியைப் பிடித்திழுத்து சுமார் ஒருலட்சம் ரூபாய்களுடன் ஓடிவிட்டனர்.

பீகார் மாநிலம்

4. பங்க் கடோலி முஜபர்பூரில் 1949 ம் ஆு மே மீ 11-ந் தேதி முனிசிபல் தொழிலாளர்களைக் கொண்டு போட்டிச் சங்கம் ஒன்றை நிறுவிய 'ஜீவாச் ப்ரசாத்' என்னும் முனிசிபல் ஜமேதார் ஒருவரை, முஜபர்பூரைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகள் கொலை செய்தனர்.

5. பர்ஸாவில் 1949ம் ஆு ஜூலை மீ 8-ந் தேதி. 'ஸாகுனி' என்ற கிராமத்தைச் சேர்ந்த "சாமர்களை" நிலச்சுவான்தாரர்களிடமிருந்தும், பெரிய மிராசுதாரர்களிடமிருந்தும் அதிகக் கூலியைக் கேட்குமாறு இரு கம்யூனிஸ்டுகள் தூண்டி வந்தனர். அக்கிராமத்திலுள்ள ஒருவர் இதை எதிர்த்ததும், கம்யூனிஸ்டுகள் அவரைக் குத்திக் கொன்றனர்.

[இது இந்திய சர்க்காரின் உள்நாட்டுஇலாக்கா வெளியிட்டுள்ள சர்க்கார் அறிக்கையின்படி.]

★ அடுத்த இதழில் மேற்கு வங்காளத்தில் கம்யூனிஸ்டுகள் நடத்திய கொலை, கொள்ளை விபரப் பட்டியல் வெளிவரும். ★

அடுத்த இதழில்!

அதிர்ச்சி வைத்தியம்!
ஒய்யாரக் கொண்டைகளின் ஓலம்!
'மாஸ்கோ' பாதை!

தென்னரசு எழுதும்
தொடர்கதை
தைமூரின் காதலி
தொடரும்

★ தோழா ! தோழா ! காம்ரேட் தோழா ! ★

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கொலை, கொள்ளை பட்டியல்

—: எம். ஸ்டாலின்ராஜ் :—

1948-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டாவது காங்கிரஸ் (மாநாடு) கல்கத்தாவில் கூடியது. நாட்டில் 'புரட்சி' கொழுந்து விட்டெரிவதற்கான சூழ்நிலையில் 'புரட்சிகர மானதோர்' திட்டம் அங்கு திவிரமாக வகுக்கப்பட்டது. அந்தத் திட்டத்தை அனுசரித்து மாகாணக் கம்யூனிஸ்டுகள், பலாத்காரத்தையும், அராஜகத்தையும் தங்கள் கொள்கைத் திட்டத்தில் ஒன்ருக வகுத்துக் கொண்டனர். காந்தியாரின் படுகொலைக்குப்பின் நாட்டில் நிலவிய குழப்ப நிலையைத் தங்களுக்கு அனுகூலமாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

அரசியலார் இவர்கள்மீது நடவடிக்கை எடுக்க ஆரம்பித்ததும் பலர் தலைமறைவாக ஓடினர்; சிலர் மறைவாக இருந்துகொண்டே கட்சி நடவடிக்கைகளைச் செய்துவந்தனர். கைது செய்யப்பட்டு சிறைக்கோட்டம் புகுந்த 'வீரர்கள்' பலர், கட்சியுடன் தங்களுக்குள்ள எல்லாத் தொடர்புகளையும் கைவிட்டுவிடுவதாகவும், இனி எவ்வித நாசவேலைகளிலும் ஈடுபடுவதில்லை எனவும், சர்க்காருக்கு அதிகார பூர்வமான வாக்குறுதியை எழுதித் தந்தனர்.

இத்தகு 'வீர வரலாறு' சிவப்பு எழுத்துக்களால் சரிதத்தில் பொறிக்கப்படுமுன், அகில இந்தியக் கம்யூனிஸ்டுகளின் ஆதி வரலாறு அவசியம் தெரிய வேண்டியதாகும். 'பலாத்காரத்தைக் கைவிட்டுவிட்டோம்' என்று, இன்று பசுத்தோல் போர்த்திவரும் இந்தப் புலிகள், தேர்தல் நாடகத்திற்கான வேஷம் போடுகின்றனர். இவர்கள் நடாத்திய பலாத்கார வெறிச்செயல்கள்—வெளியிட்ட கோர பிரசுரங்கள்—செய்த கொலைகள் ஆகியவற்றை இந்தக் கட்டுரை எடுத்துக் காட்டும்.

★

இந்தியக் கம்யூனிஸ்டுகள் தங்களுக்கென படை அமைத்துள்ளனர். கொரில்லாப் படைகள், அதிர்ச்சிப் படைகள் என்பவையே அவை.

"அதிர்ச்சிப் படையினருக்கான பயிற்சித் திட்டம்" எனும் தலைப்பில் கம்யூனிஸ்டுகள் வெளியிட்டுள்ள நூலில் காணப்படுவது:

1. இந்தத் திட்டம் 'அதிர்ச்சிப் படை'யைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே உரியது. மற்றும் இரண்டு திட்டங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று படைத் தளபதிகள் அல்லது தலைவர்கள் ஆகியோருக்கானவை.

2. இத்திட்டம் 'மேயோ' என்பவரால் தொடங்கப்பட்ட வியூக முறைகள், கொரில்லாப் படைக்கான கொள்கைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப் பட்டுள்ளது. நம்முடைய எதிரி யார், நாம் ஏன் போர் தொடுத்திருக்கிறோம், இந்தப் போராட்டம் எவ்வளவு கடுமையானதாகவும் நீடித்துவிடக் கூடியதாகவும் இருக்கிறது என்பதை மட்டும் இங்கே குறிப்பிடுகிறோம்.

படையைச் சேர்ந்தவர்களின் ஆர்வத்தையும், சுய முயற்சியையும் வளர்ப்பதற்காக, ஸ்தாபன சம்பந்தமான செய்திகளும் அறிவிக்கப்படுகின்றன.

3. இத்திட்டத்தின் பாதிக்காலம் ஏட்டளவில் பாடங்களை அறிவதிலும், மற்ற பாதிக்காலம் தத்ரூபமாகக் காரியங்களைச் செய்து அனுபவம் பெறுவதிலும் செலவிடப்படும்.

ஒவ்வொரு நாளும் சந்தடியில்லாமல் கொலை செய்வது. கடைசி நாட்களில் இரவு விளையாட்டுகள் முதலியனவற்றில் தத்ரூபமான பயிற்சிகள் கட்டாயம் அளிக்கப்படும். அதாவது ஒரு கூட்டத்தார் போலீஸ் ஸ்டேஷனைத் தாக்குவது, மற்ருெரு கூட்டத்தார் அத்தாக்குதலிலிருந்து தற்காத்துக் கொள்வது, பதுங்குவது, சாகசச் சதிச் செயல்களைச் செய்வது முதலியவற்றைப் பகற் காலங்களிலும், ஊர்ந்து செல்லுதல் முதலிய பயிற்சிகளை இராக் காலங்களிலும் செய்வது.

4. எல்லாப் படையினருக்கும் இப்பயிற்சியின் மொத்த அம்சங்களையும் கற்றுத் தரக்கூடாதென்று பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள், கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். ஏனெனில், கல்கத்தாவில் உள்ள படையினருக்குக் காடுகளில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளைப் பற்றிச் சொல்லித் தருவதாலோ, அல்லது டார்ஜிலிங்கிலுள்ளவர்களுக்கு ஆற்றுப் படுகைகளில் சென்று தாக்கும் விதத்தைக் குறித்துப் பயிற்சி தருவதாலோ எவ்வித பிரயோஜனமும் ஏற்படாது. எனவே, அந்தந்தப் பிரதேசத்தைச் சார்ந்தவர்களுக்கேற்ற விஷயங்களிலேயே பயிற்சி அளிக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்தப் பாடத்திட்டம் அனாவசியமாகப் பெருகிவிடும்.

5. இங்கே, துப்பாக்கி, தோட்டாத் துப்பாக்கி, கை குண்டுகள் முதலியவற்றைக் குறித்துச் சொல்லப்படுகின்றன. இந்த ஆயுதங்கள் சுலபமாகவும், அதிகப் பிரயாசையின்றியும் கிடைக்கும். டம்மி துப்பாக்கி, ஸ்டென் துப்பாக்கி, சுழல் துப்பாக்கி ஆகியவற்றைப் பற்றிய விஷயங்கள் உயர்தரப் பாடத்தில் கற்றுத் தரப்படும்.

மேலே கூறப்பட்ட நூலில் 'ஸ்தாபன முறை' என்ற தலைப்பில் பின்வரும் வாசகங்கள் காணப்படுகின்றன:

"கொரில்லா நடவடிக்கைகள் என்ருல் என்ன?

கொரில்லா நடவடிக்கைகள் என்ருல், போலீஸ் நிலையம், ஜமீந்தார் அல்லது ஜோடுதார் வீடுகள் ஆகியவற்றைத் தாக்குவதாகும். மற்றும், போலீஸ் படையினரை மறைத்து வைத்து நிர்மூலமாக்கி அவர்களிடமிருந்து ஆயுதங்களைப் பெறுதல், எதிரிகளின் போக்குவரவுக்கான சாதனங்களை நாசப்படுத்துதல், தந்தி, டெலிபோன் கம்பிகளை வெட்டி எதிரிகளைத் தனிப்படுத்துதல். பின்புறமாகவோ, பக்கவாட்டிலோ காவல் இல்லாத அல்லது பலவீனமான மார்க்கம் மூலமோ எதிர்பாராத வகையில் திடீரென எதிரியைத் தாக்குதல், அடித்தல், அவனது சக்தியையெல்லாம் பாழாக்கி அழித்தல். கடைசியாக நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் சுதந்திர இயக்கத் தளங்களை ஏற்படுத்தல் முதலியவையும் அடங்கும்.

சிறிய அளவில் ஆரம்பித்து உங்கள் பலத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக வளர்த்துக்கொள்ள வேண்டும். சீனுவில் நடைபெற்ற கொரில்லாப் போர் முறையைப் பற்றிய எண்ணங்களை நீங்கள் தற்சமயம் அடியோடு விட்டுவிட வேண்டும். இன்றைய நேர்முகப் போர்வையை அனுசரிப்பதற்கு அவர்களுக்கு எத்தனை ஆண்டுகள் பிடித்தன என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

படைகளை அமைத்தல் :

கொரில்லாப் படை அல்லது அதிர்ச்சிப் படை என்று நாம் வழங்கும் படையின் அடிப்படை யூனிட்டு ஒன்றில் தலைவர் உள்பட 5 முதல் 10 வீரர்கள் இருப்பர். செய்ய வேண்டிய வேலைகள், கடமைகள், சுடும் ஆற்றல் ஆகியவற்றைக் கவனித்துப் பார்க்கும்போது, ஒவ்வொரு அதிர்ச்சிப் படையிலும், தலைவர் உள்பட 10 வீரர்கள் இருப்பது சிறந்த முறையாகும். (ஆனால், சில பிரதேசங்களில் தக்க ஆட்களைத் தேர்ந்தெடுப்பது, தொடர்பு கொள்வது, விரைவாகத் திரட்டுவது முதலிய காரியங்களில் ஏதாயினும் கஷ்டங்கள் இருந்தால் ஆரம்ப நிலையில் ஒரு படையில் 5 முதல் 10 பேர் வரையில் இருந்து வரலாம்).

இவர்கள் ஒரே கிராமத்திலிருந்தோ அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கிராமங்களிலிருந்தோ திரட்டப்படலாம். ஆரம்ப நிலையில் ஜில்லா காரியதரிசியோடு கலந்தாலோசித்து, ஜில்லாத் தலைவர் இந்தப் படையின் தலைவரை அல்லது தளபதியைத் தேர்ந்தெடுப்பார்.

உபகரணங்கள் :

இந்த வீரர்கள் எவ்விதச் சின்னத்தையோ அல்லது குறிப்பிட்ட உடையையோ அணியக்கூடாது. ஏனெனில், அவையெல்லாம் இவர்களை எதிரிக்குக் காட்டிக்கொடுத்து விடும். அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு குர்க்கி அல்லது ஒரு கைக் கோடாலி அல்லது ஒரு சிறிய டாங்கி, ஒரு பேனு அல்லது சிறிய கத்தி, வலுவுள்ள கயிறு ஆகிய இவற்றைத் தம் சொந்த உபயோகத்துக்காக வைத்திருக்கவேண்டும். இவற்றுடன் அவர்களின் முக்கிய ஆயுதமும் இருந்து வரவேண்டும். வீரர்கள் ஒன்று திரளும்போதும், நடவடிக்கையில் இறங்கும்போதும், அவர்கள் இந்த உபகரணங்களை வைத்திருக்க வேண்டும்.

'அதிர்ச்சிப் படை'யின் வேலைகள் :

அதிர்ச்சிப் படையைச் சேர்ந்த வீரர்களாகிய உங்கள் வேலை இலக்குகளைத் தாக்கி, பதுக்கி, நாசப்படுத்துவதே யாகும். அதிர்ச்சிப் படைத் தளபதியின் கீழ், எல்லா வீரர்களும் கூட்டு முறையில் நடந்து கொண்டால் இக்காரியங்களைச் சாதித்துவிடலாம்.

திடீர்த் தாக்குதல் :

திடீர்த் தாக்குதல் என்பது, ஒரு குறிப்பிட்ட உத்தேசத்தோடு திடீரெனத் தீர்மானித்து, நிலையாக உள்ள இலக்குகளைக் கொஞ்ச நேரம் வலியச் சென்று தாக்கும் நடவடிக்கையாகும்.

திடீர்த் தாக்குதலை நடத்த வேண்டுமானுல் பின்வரும் விஷயங்களைப் பூராவாக நன்கு அறிந்திருக்க வேண்டும். இவற்றைப் பற்றிய தகவல்களையெல்லாம் அதிர்ச்சிப் படையின் தளபதி சேகரித்து வைத்திருக்க வேண்டும்.

1. இலக்கு உள்ள இடம்.
2. அந்த இலக்கில் உள்ள நபர்கள், அவர்கள் வசமுள்ள பொருள்கள் ஆகியவற்றின் பலம்.
3. இலக்கிற்குச் செல்வதற்கும், அங்கிருந்து திரும்புவதற்கும் உள்ள மார்க்கம், அல்லது வழி (திரும்பி வரும்போது செல்லும் வழி, தாக்கச் சென்றபோது பின்பற்றிய மார்க்கமாக இருக்கக் கூடாதென்பதை, படைத் தளபதி எப்போதும் கருத்தில் கொண்டிருக்க வேண்டும்).
4. திடீர்த் தாக்குதலை ஆரம்பிக்கு முன்பு, அதை அதிசயமான வகையில் நடத்த முயலவேண்டும். அதாவது, எல்லோருக்கும் தெரியாதவையும், புதுமையானவையும், ரகசியமானவையுமாக உள்ள முறைகளையோ அல்லது மார்க்கங்களையோ பின்பற்றி இலக்கை நெருங்கவேண்டும்.
5. பலம் (அதாவது ஆட்களின் எண்ணிக்கை, அவர்களால் கொண்டுவரப்படும் ஆயுதங்களின் தொகை, அவற்றின் ரகம் முதலியன).
6. தனிப்படுத்துதலும் (தாக்கப்பட்ட எதிரிக்கு வெளியிலிருந்து புதிதாக உதவி வராமல் தடுப்பது), பிரித்தலும் (இலக்கு தாக்கப்படுவதற்கு முன்பே அங்கிருந்து ஒரு பகுதியை மற்ருேரிடத்திற்குக் கொண்டு செல்வது).

திடீர்த் தாக்குதலைத் திட்டமாக்குவதற்கு முன்பு நடத்தப்படும் அதிசய நடவடிக்கை உயர்ந்த முறையில் அமையாதபோது - அதாவது பூரணமாக உறங்கிக் கொண்டிருக்கும் எதிரி அதை உணராமல் போகும்போது படை உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்கும்போது, எதிரியை விட அதிக அளவுள்ள உத்தியோகஸ்தர்களைப் பெற்றிருக்கும் முறை, பின்பற்றப்பட வேண்டும்.

அதிசய நடவடிக்கை சாத்தியமானதாயும், முக்கியமானதாயும் கருதப்படும்போது-அதாவது அதிக எண்ணிக்கை தவிர்க்கப்படாமல் போகும்போது - "தாக்கும் படையின் குறைந்த அளவை" நிச்சயித்துக்கொண்ட பின்பு, உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்டு அதற்கேற்ப, படையின் அளவு தக்கவாறு மாற்றியமைத்துக் கொள்ளப்படும்.

அழிவினை நாட்டில் ஆக்கிய தோழா !

பலப்பல கொலைகள் தினம்தினம் கொள்ளை உலகினிலே செய்தாய்!

திடீர்த் தாக்குதலுக்கேற்ற இலக்குகள் :

கிராமப் பிரதேசங்களில் இயங்கும் அதிர்ச்சிப் படைகளுக்கு அமைந்த இலக்குகள் வருமாறு :

(அ) போலீஸ் ஸ்டேஷன்

(ஆ) போலீஸ் முகாம்

(இ) ஜமீந்தார்கள் அல்லது ஜோடுதார்களின் விடுகள்.

(ஈ) ரயில்வே ஸ்டேஷன்கள் முதலியன.

இந்த விஷயங்கள் சம்பந்தமாகத் திடீர்த் தாக்குதல்கள் நடத்தத் திட்டமிடும்போது, "தாக்குதலுக்கான அவசிய சாதனங்கள்" என்ற தலைப்பின் கீழ் விவரிக்கப்பட்ட முறையிலேயே காரியங்கள் நடத்தப்பட வேண்டும்.

புரட்சி எனும் உலைக் கூடத்திலிருந்து உதித்தெழுந்ததாக எண்ணிக்கொண்டு, எவை புரட்சிகரமானவை என்பது தெரியாமல், கொள்கைக் குழப்பத்தில் மூழ்கித் தவிக்கும் கம்யூனிஸ்டுப் பிரச்சாரப் பீரங்கிகள், அகில இந்திய ரீதியில் கொலை, கொள்ளை போன்ற பலாத்காரச் செயல்களைச் செய்து வந்திருக்கின்றனர். விவசாயிகள், தொழிலாளர்கள், பொதுமக்கள் ஆகியோரிடையே 'புரட்சி' எனும் போலி வார்த்தைகளைக் காட்டி, சொல்லலங்கார வார்த்தைகளால் கலகத்தை ஏற்படுத்தினர். அத்தகைய துவேஷப் பிரச்சாரப் பிரசுரங்களின் சில பகுதிகள் இவை:

1949-ம் ஆண்டு மார்ச் மாதம் 9 ம் தேதி கம்யூனிஸ்டுகள் ஒரு பெரும் ரயில்வே வேலை நிறுத்தத்தைச் செயலாக்க முயன்றனர். பொதுமக்களது ஒத்துழைப்பு இல்லாததால் அந்த வேலைநிறுத்தம் படுதோல்வி யடைந்து கம்யூனிஸ்டுகளின் முகத்தில் கரிபூச வைத்தது. வால்அறுந்த நரிபோல் கம்யூனிஸ்டுகள் கதறினர். 9-4-49ல் பம்பாய் நகரிலிருந்து வெளியான 3/49 எண்ணுள்ள "செய்திப் பத்திரம்" என்பதில் பின்வரும் 'அவல ஒலி' ஒலிக்கும் :

"தோழர்களே,

மார்ச்சு மாதம் 9-ம் தேதியன்று நடக்கவேண்டிய விதத்தில் வேலைநிறுத்தம் ஏற்பட்டிருந்தால், ரயில்வே தொழிலாளர்கள் தங்கள் பலத்தை உணர்ந்து, அடக்குமுறைகளுக்குத் தக்கவாறு பதிலளித்திருந்தால், நேரு அரசாங்கம் கட்டவிழ்ந்து விட்டிருக்கும். மிருகத்தனமான தாக்குதல்களை யெல்லாம் சிதறியோடச் செய்திருக்க முடியும். அப்போது சோஷலிஸ்டு துரோகிகள், தொழிலாளரின் முதுகில் குத்தப் பயப்பட்டும் இருப்பார்கள்.

மார்ச்சு மாதம் 9-ம் தேதி நடந்த அடக்குமுறையிலிருந்து இந்தியத் தொழிலாளர்களுக்கு ஒரு பாடம் நன்கு விளங்கியது. அது வருமாறு :

உங்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்கான போராட்டத்தில் நீங்கள் வெற்றிபெற வேண்டுமானால், உங்களிடம் பலமுள்ள ஒரு ஸ்தாபனம் இருக்கவேண்டும். எத்தகைய அடக்குமுறைகளையும் எதிர்த்து நிற்கத் தக்க முறையில் அமைந்த புரட்சிகரமான ஸ்தாபனம், எஃகு போன்ற வலிமை மிக்க அமைப்பு உருவாக வேண்டும். எண்ணற்ற பேர்களைக் கைது செய்வதைக் கண்டோ, துப்பாக்கிகள், குண்டுகள் ஆகியவற்றைப் பார்த்தோ பயப்படாத முறையில் அமைந்த ஸ்தாபனம் வேண்டும். அப்போதுதான் தொழிலாளி வர்க்கம் தங்களுடைய போராட்டங்களைப் பாதுகாப்போடு நடத்தி, வெற்றிப் பாதையை நோக்கி முன்னேற முடியும்.. ..."

இந்த அறிக்கையைப் பின்பற்றி 1949-ம் வருடம் ஏப்ரல் 26-ல் அங்கத்தினர்களுக்கு மட்டும், கம்யூனிஸ்ட் கட்சியின் வங்க மாகாணக் கமிட்டி ஒரு சுற்றறிக்கை அனுப்பியது. அதிலும் கிளர்ச்சியைத் தூண்டிவிடும் வாசகங்களே காணப்பட்டன. இராணுவத்தினருக்கும், போலீசாருக்கும் கடிதங்கள் எழுதிக் கலகம் செய்யுமாறு தூண்டினர். "**சகோதர சிப்பாய்களே! உங்களுடைய துப்பாக்கிகளையும், துப்பாக்கி ஈட்டிகளையும் உங்கள் அதிகாரிகளின் மீதும், மந்திரிகளின் மீதும் திருப்புங்கள் !**" எனும் மகுடத்தின்கீழ் ஒரு பிரசுரம் வெளியிட்டனர்.

★

வங்காள மண்பாண்டக் கம்பெனியில் ஜூன் எட்டாம் தேதி (1949) முதலாளிக்கும், தொழிலாளர்களுக்கு மிடையே கலவரம் மூண்டது. கம்யூனிஸ்டுகள் இதைப் பயன்படுத்தித் தொழிற்சாலையையே கைப்பற்ற முயன்றனர். கலகத்தில் கம்யூனிஸ்டுகளும் ஈடுபட்டு, கற்களையும், இரும்புக் கம்பிகளையும் ரசாயன பல்புகளையும், அக்கினி திராவகத்தையும் விசி எறிந்ததாக சர்க்கார் குறிப்பு ஒன்று கூறுகிறது. அதன் விளைவாக இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள், ஒரு அசிஸ்டண்ட் கமிஷனர், ஒரு டெபுடி கமிஷனர் ஆகியோர் படுகாயமுற்றதனால், போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம்.

சீராம்பூருக்கருகிலுள்ள மஹேஷ் ரத்டாலா எனுமிடத்தில் ஜூன் 22-ம் தேதி தொழிற்சங்க யூனியன் சார்பில் தொழிலாளர் கூட்டம் ஒன்று நடந்தது. அங்கே பேசியவர்கள் அனைவருமே மில்களை பலாத்காரமாகக் கைப்பற்றவேண்டுமென்றும், போலிசாரிடமிருந்து ஆயுதங்களைப்பறித்து அவர்களுக்கு விரோதமாகப் பயன்படுத்த வேண்டுமென்றும் கூட்டத்தினருக்கு வேண்டுகோள் விட்டனர். கூட்ட முடிவில் அவர்கள் 3 பகுதிகளாகப் பிரிந்து ஒரே சமயத்தில் மஹேஷ் போலீஸ் அவுட்போஸ்ட், சீராம்பூர் சப்-ஜெயில் ஆகியவற்றைத் தாக்கினராம். இதில் சுமார் 250 பேர் தாக்கியதாக சர்க்காரின் தகவல் கூறுகிறது.

இந்த சம்பவங்களுக்குப் பின் கம்யூனிஸ்டுகள் குதித்தெழுந்தனர். "**புரட்சி மிக்க மக்களுக்கு கம்யூனிஸ்டுக் கட்சியின் அழைப்பு**" என்ற வெளியீட்டில் விளக்கப்பட்டிருப்பதாவது :

"...மண்பாண்டத் தொழிற்சாலையின் வீரமிக்க பாட்டாளிகள் ஆரம்பித்து வைத்த போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துங்கள். கொலைகார பிதன் (மேற்கு வங்கப் பிரதமர், டாக்டர் பிதன் சந்திரராய்) அரசாங்கம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததைக் கண்டித்து, ஒவ்வொரு தொழிற்சாலையிலும் வேலைநிறுத்தம் ஏற்படச் செய்யுங்கள். முதலாளிகளிடம் கைக்கூலி வாங்கும் குண்டர்களைக் கொண்ட பிதன் அரசாங்கத்தை ஒழியுங்கள். எல்லாத் தொழிற்சாலையிலும் உள்ள பாட்டாளி மக்களே! உங்கள் சகோதரர்களான மண்பாண்டத் தொழிலாளர் காட்டிய வழியைப் பின்பற்றி முன்னேறுங்கள்! அந்த மண்பாண்டத் தொழிலாளர் சிந்திய ரத்தத்துக்காகப் பழிக்குப் பழி வாங்குங்கள்! ஒவ்வொரு தொழிற்சாலையிலும் வேலைநிறுத்தம் செய்யுங்கள்! கொலைகாரக் காங்கிரஸ் தலைவர்களையும், மந்திரிகளையும் தாக்குங்கள்......"

மண்பாண்டத் தொழிலாளரின் (கம்யூனிஸ்ட்) சங்கத்தைச் சேர்ந்த போராட்டக் கமிட்டி வெளியிட்ட வேறொரு நோட்டீசில் பின்வருமாறு கண்டிருந்தது :

"தோழர்களே,

முதலாளிகளின் பாதரட்சைகளை நாவால் சுவைக்கும் காங்கிரஸ் அரசாங்கத்துக்கு, தாங்கள் நினைத்தபடியெல்லாம் தொழிலாளர்கள்மீது அடக்குமுறைகளைப் பிரயோகிக்கும் காலம் மலையேறிவிட்டதென்பதை வங்க மண்பாண்டத் தொழிலாளர் காட்டிவிட்டனர். தொழிலாளர்களின் அன்புக்குரிய தலைவர்களை வேலையிலிருந்து நீக்க, வங்க மண்பாண்டக் கம்பெனி முதலாளிகள் முயன்றனர். தம்மிடமுள்ள துப்பாக்கிகளைக் காட்டி அரசாங்கமும், முதலாளிகளும் தம் செய்கையைத் தொழிலாளர்கள் ஒப்புக்கொள்ளச் செய்யலாம் என்று நினைத்தனர். ஆயுதபாணிகளான 200 போலீஸ்காரர்களைக் கொண்டுவந்து, தொடர்ச்சியாக மூன்று மணி நேரத்துக்குமேல் தொழிலாளரைப் பார்த்துச் சுடச் செய்தனர். அந்த 200 துப்பாக்கிகளையும் எதிர்த்து நம் தொழிலாளர்கள் அங்கிருந்த போல்ட்டுகள், நட்டுகள், கற்கள் முதலியவற்றைக் கொண்டு 3 மணி நேரத்துக்குமேல் போராடி கொலைகார டெபுடி கமிஷனரையும், சர்க்கார் நாய்களையும் காயப்படுத்தினர்.

நம் எதிரியான காங்கிரஸ் அரசாங்கத்தை ஒழித்துக்கட்டவேண்டும். மண்பாண்டத் தொழிலாளர்கள் இவ்வேலையைத் தொடங்கி வைத்துவிட்டனர். அவர்களுடன் நீங்களும் சேருங்கள். வருகிற ஜூன் 16 ம் தேதி என்டல்லி சில்ரன் பார்க்கில் நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொள்வதன்மூலம், மண்பாண்டத் தொழிலாளர்களுடன் சேர்ந்து போராட்டத்தைத் துவக்குங்கள். உங்கள் தொழிற்சாலைகளில் ஹர்த்தால் அனுஷ்டிப்பதன் வாயிலாக போராட்டத்தைப் பலப்படுத்துங்கள். போலீசார், ஒற்றர்கள் ஆகியோரைத் தாக்குவதன் மூலம் அவர்களின் அடக்குமுறைகளை நிறுத்துங்கள்.

தோழமைமிக்க,
மண்பாண்டத் தொழிலாளரின்
போராட்டக் கமிட்டி
ஜூன் 1949.

உண்ணாவிரத நாடகம்

1949 – ஏப்ரலுக்குப் பின்னர் இந்தியக் கம்யூனிஸ்டுகள் தம் போர் வகைகளில் புதியதொரு ஆயுத பலத்தையும் பயன்படுத்திக்கொண்டனர். அதுதான் சிறைச்சாலைகளில் உண்ணாவிரதம் இருப்பது. இதனால் தோழர்களின்மீது பொது மக்களுக்கு 'அனுதாபம்' ஏற்படலாம் என்றும் எண்ணினர். சிறையிலே உள்ள கம்யூனிஸ்ட் கைதிகள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்று ஐக்கிய மாகாணக் கமிட்டி ஒரு ரகசியச் சுற்றறிக்கை விடுத்திருந்தது. "மாகாணக் கமிட்டி தற்கால நிலைமையையும், கடமைகளையும் ஆராய்கிறது" என்ற தலைப்பில் வெளியான அறிக்கையில், "தோழர்கள் சிறைச்சாலையிலிருந்து வெளிவரக் கூடாது. ஜெயிலுக்குள்ளிருந்தே அரசாங்கத்துக்குத் தொல்லை விளைவிக்க வேண்டும். போராட்ட வகையில் இதுவும் ஒன்று என, தோழர்கள் உணரவேண்டும்" என்று எழுதப்பட்டிருந்தது. இதன் விளைவாக (சர்க்காரின் புள்ளி விபரப்படி) 21-4-1949 முதல் 350 கம்யூனிஸ்ட் கைதிகள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

'மேற்கு வங்க மஹிள ரக்ஷ சமிதி' என்ற கம்யூனிஸ்டுகள் ஆதிக்கம் பெற்ற ஒரு கழகம், "600 அரசியல் கைதிகளின் உண்ணாவிரதம் – அரசியல் கைதிகளை ஆதரித்து மாபெரும் கிளர்ச்சியைத் துவக்குங்கள் !" எனும் தலைப்புடன் நோட்டீஸ் வெளியிட்டது.

நாடெங்கும் கிளர்ச்சிகள் ஆரம்பமாயின. உண்ணாவிரதமிருக்கும் கைதிகளை ஆதரித்து – 144 தடையையும் மீறி பொதுக்கூட்டங்களும், ஊர்வலங்களும் நடாத்தினர். மஹிள ஆத்ம ரக்ஷ சமிதி ஒரு ஊர்வலத்தைக் கூட்டியது. தடையுத்தரவை மீறியதற்காக போலீசார் தடுத்தனர். இருதரப்பாருக்கும் கலகம் மூண்டது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். மொத்தம் எட்டுப் பேர் மாண்டனர். அரசாங்கத்துக்குச் சொந்தமான பல பஸ்கள், டிராம்கள் கொளுத்தப்பட்டன. போலீசார் பலர் இறந்தனர்.

இதையொட்டி, மாகாணச் சிறையைச் சார்ந்த ஜாமீன் கைதிகளில் பலர், தாங்கள் கண்டனம் தெரிவிப்பதாகக் கூறி, கொட்டடிகளுக்குச் செல்ல மறுத்தனர். வழக்கம் போல் இரவு 9 மணிக்குமேல் அவர்கள் கொட்டடிக்குச் செல்ல மறுப்பார்களேயானால், பலவந்தமாக அவர்களை உள்ளே தள்ளிப் பூட்டுவது என்று சிறைச்சாலை அதிகாரிகள் தீர்மானித்தனர்.

அன்று இரவு எதிர்பார்த்தபடியே கம்யூனிஸ்ட் கைதிகளுக்கும், சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் தாக்குதல் ஏற்பட்டது. இதனால் போலீசார் வரவழைக்கப்பட்டனர். நீண்ட பலகைகளைக் கொண்டு கைதிகள் போலீசாரைத் தந்திரமாகத் தாக்கினர். அதில் 35 போலீசார் காயமடைந்தனர் – கைதிகளில் ஒருவர் கொல்லப்பட்டார்-மற்றும் 12 பேர் காயமுற்றனர்.

கல்கத்தா டம்டம் சிறைக்கூடத்தைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கைதிகள், தம் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படாததால் உண்ணாவிரதம் துவக்கினர். ஜூன் 10 ம்தேதி (1949) கொட்டடிக்குச் செல்ல இவர்களும் மறுத்தனர். போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர். ரகசியமாகக் கைதிகள் கை குண்டுகளை வீசினர்; போலீசாரும் சுட்டனர். நீண்ட போராட்டத்துக்குப் பின் இரவு 3 மணிக்கு கைதிகள் தாமாகவே சரணடைந்தனர்.

நிலமிசை அழிவும் நித்தமும் ஏய்ப்பும் நிலவிடவே செய்தாய்!

அகிலமெலாம் இகழ்ந்தோதுக்கும் 'அண்டர்கிரவுண்ட்' வீரர்களின் அழிவுமிகு செயல்தான் என்னே?

கைதிகளில் மூவர் கொல்லப்பட்டனர்; அறுவர் காயமடைந்தனர்.

இத்தகு சம்பவங்களைப் பிரமாதப்படுத்தி 'அரசியல் கைதி'களை ஆதரிப்பதாகக் கூறி "ஜூன் 27 கைதிகள் தினம்!" என்று கொண்டாடுமாறு கூறி, "வங்காளம் முழுவதையும் நெருப்பிட்டுக் கொளுத்துங்கள்!" என்ற தலைப்பிலே கம்யூனிஸ்ட் கட்சிவிடுத்தஅறிக்கை:

"புரட்சித் தோழர்களே!

கைதிகளின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளுமாறு பிதன் அரசாங்கத்தைப் பலவந்தப்படுத்துங்கள்! சிராம்பூர், தென்கல்கத்தா ஆகியவற்றைப் பின்பற்றி முன்னறுங்கள். அந்தப் பிரதேசத்து ரமக்கள் காட்டிய வழியைப் பின்பற்றுங்கள். மேற்கு வங்கத்தைச் சார்ந்த ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு நகரத்திலும் இந்தக் கொலைகார அரசாங்கத்துக்கும், ஏஜண்டுகளுக்கும் தொல்லை விளைவிக்கவேண்டும். அரசியல் கைதிகளைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கொலை செய்த இந்தக் காங்கிரஸ் மிருகங்களுக்குக் கருணையே இல்லை. இவர்களுக்குக் கருணை காட்டுவதென்பது, கைதிகளின் கொலையை ஆதரிப்பதாகும்.

வங்க நாடெங்கும் உள்ள தொழிலாளர்களே! விவசாயிகளே! பொதுமக்களே! முன்னேறுங்கள்! நாட்டில் எங்கு பார்த்தாலும் வேலை நிறுத்தங்கள், ஊர்வலங்கள் ஆகியவற்றை நடத்துங்கள். காங்கிரஸ் கொலைபாதகர்களை நிர்த்தூளியாக்குங்கள். இந்திய தேசியத் தொழிற்சங்கக் காங்கிரசின் ஆபீசுகளையும், காங்கிரஸ் சேவாதளங்களையும் அழித்து, சிறைக்கதவுகளைத் தாக்கி, கைதிகளைத் தப்ப விடுங்கள். ஜூன் மீ 27ந் தேதியைக் 'கைதிகள் நாளாக'க் கொண்டாட வேண்டுமென்று அகில இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரசும், கிருஷிக் சபாவும் அறிவித்துள்ளன. அந்நாளில் வங்காளம் முழுவதையும் நெருப்பிட்டுக் கொளுத்துங்கள்! காங்கிரஸ் மிருகங்களை எல்லாப் பக்கங்களிலிருந்தும் தாக்குங்கள்! முன்னறிவிப்பு இல்லாமல் அநேக இடங்களில் திடீரெனச் சென்று அவர்களைத் தாக்குங்கள்! கணக்கற்ற பிரதேசங்களில் கூட்டங்களைக் கூட்டி ஊர்வலங்களை நடத்துங்கள். இந்த அரசாங்கம் இன்றையதினம் அச்சம்கொண்டு நடுங்கி வருகின்றது. எத்தனை இடங்களில்தான் அவர்கள் போலிசாரை வைத்திருக்கமுடியும்? முன்னேறுங்கள்! இன்றைய தினம் முதற்கொண்டு, அதாவது ஜூன் 26-ந் தேதி முதற்கொண்டு ஆரம்பியுங்கள்! இந்தக் கொடுங்கோல் அரசாங்கத்தின் கனவை நிர்மூலமாக்குங்கள். கைதிகளின் கோரிக்கைகளை ஒப்புக்கொள்ளுமாறு அரசாங்கத்தாரை நெருக்குங்கள்! கைதிகளை விடுதலை செய்யுங்கள்! கொலைகாரக் கொடுங்கோல் மந்திசபை, அதன் அதிகாரிகள், ஏஜண்டுகள் ஆகியோரைத் தண்டியுங்கள்!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
(கல்கத்தா யூனிட்)

18 ஜூன் 1949.

"கொலைகாரனை எதிர்த்துப் போராடு!" என்ற தலைப்பில் கல்கத்தா யூனிட் கம்யூனிஸ்ட் கட்சி கூறியிருப்பதாவது: (இது வங்க மொழியில் வெளியானது.)

"கல்கத்தாவைச் சார்ந்த விரத் தொழிலாளர்களே! நகரமக்களே! தாய்மார்களே! சகோதரிகளே!

கொலைகாரக் காங்கிரஸ் அரசாங்கத்தின் சிறைகளிலுள்ள அரசியல் கைதிகள் உண்ணுவிரதம் மேற்கொண்டு இன்றைக்கு 9 நாட்களாகின்றன. அவர்கள் கொஞ்சங் கொஞ்சமாக மரணவாயிலை நோக்கிச் சென்று கொண்டிருக்கிருர்களென்ருலும், பாஸிஸ அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்குத் தலைவணங்க அவர்கள் விரும்பவில்லை. அந்தக் கைதிகளின் உயிர்களுடன் விளையாடும் 'ராய் மந்திரி சபையை' (டாக்டர் பிதன்சந்திர ராய்) நாம் விட்டுவைக்க முடியாது. ஏப்ரல் 27-ந் தேதியன்று புரட்சிமிக்க தாய்மார்களும், சகோதரிகளும் கல்கத்தா தெருக்களில் வந்து, அடக்குமுறையில் இந்த அரசாங்கம் உண்ணுவிரதமிருக்கும் கைதிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு செய்ய உறுதிகொண்டனர். உடனே காங்கிரஸ் அரசாங்கத்தின் போலீஸ் வந்து, அவர்களின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யவே, நான்கு பெண்களும், இரண்டு மக்களும் கல்கத்தா தெருக்களில் கொல்லப்பட்டனர். இதன் விளைவாக புரட்சி மனம் படைத்த கல்கத்தா பொதுஜனங்களிடையே உடனடியாக வெறுப்பு ஏற்பட்டது.

பழிகாரப் போலிசையும், காங்கிரஸ் சேவாதளக் குண்டர்களையும் அவர்கள், தம் கைக்குக் கிடைத்த எல்லாப் பொருள்களைக் கொண்டும் தாக்கினர். இவ்வாருக, தம்மீது பிரயோகிக்கப்பட்ட அடக்குமுறைகளுக்காகப் பழிவாங்கும் காரியத்தை மாணவர்களும், பொதுமக்களும் ஆரம்பித்துள்ளனர். பொதுஜனங்களின் உறுதிவாய்ந்த எதிர்ப்பைக் கண்டு கடுங்கோபம் கொண்ட ராய் மந்திரி சபை, வெறிபிடித்த நாயைப்போல் நடந்துகொண்டது. பவ்பஜார், காலேஜ் தெரு ஆகிய பிரதேசம் முழுவதையும் சுமார் 1000 க்கு மேற்பட்ட போலீசார் சூழ்ந்துகொண்டனர். அப்படியிருந்தும் பொதுமக்களின் எதிர்ப்பு அதிகரித்தது. போராட்ட உள்ளம் படைத்த ஆயிரக்கணக்கான சுரண்டப்பட்ட மக்கள், போலிஸ் படையை எதிர்த்தனர். அவர்கள் தெருக்களிலே அரண்களை அமைத்ததோடு, அரசாங்கத்தின் பஸ்களுக்கும், டிராம்களுக்கும் தீயிட்டனர். படுகொலைக்குப் பழிவாங்கும் முறையும், கொலைகார அரசாங்க நிர்வாகத்தை நிலைகுலையச் செய்யும் விதமும் இவையேயாகும்.

கல்கத்தா நகரின் விரத்தொழிலாளர்களும், இந்தப் புரட்சிகரமான போராட்டத்தில் கலந்துகொண்டனர். பார்க் சர்க்கஸ் டிராம் டெப்போவில் போலிசாரின் பாதுகாப்பில் இருந்துவந்த தங்கள் தலைவரை, டிராம்வே தொழிலாளர்கள் விடுவித்தனர். அதேபோன்று நேஷனல் கார்பன் கம்பெனியைச் சார்ந்த வீரத் தொழிலாளர்கள் போலீஸ் பாதுகாப்பில் இருந்த ஒரு மாணவரை மீட்டனர்.

நேற்றைய தினம் கல்கத்தாவிலும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் உள்ள பல்வேறு தொழிற்சாலைகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பாட்டாளி மக்கள் பொதுவேலை நிறுத்தம் செய்து கொலைகார 'ராய் மந்திரிசபை' கலைக்கப்பட வேண்டுமென்றும் கோரினர்.

இதே கோரிக்கையின்மீது, எல்லோரும் தங்கள் போராட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டும். போலீசையும், காங்கிரஸ் ஏஜண்டுகளையும் எதிர்க்கவேண்டும். நேற்றைய தினம் தொடங்கப்பட்ட (போராட்டம்) தேசமெங்கும் பரவவேண்டும். போலீசார் வந்து தாக்குவதற்கு முன்பே, நீங்கள் போலீசைத் தாக்குங்கள். அரசாங்க ஏஜண்டுகளைப் படுகொலை செய்யுங்கள். பள்ளிக்கூடங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றிலே வேலைநிறுத்தங்கள் ஏற்பாடு செய்வதன்மூலம், உங்கள் சுலோகங்களை முழக்குங்கள். தொழிற்சாலை நிர்வாகிகளை நெருக்குங்கள். தெருக்களில் ஊர்வலம் கொண்டு செல்லுங்கள். "கைதிகளின் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்!" "144 தடையுத்தரவை வாபஸ் வாங்கு!" "அரசியல் கைதிகளை விடுதலை செய்!" "பிதன் அரசாங்கம் ஒழிக!" "காங்கிரஸ் பாஸிஸ குண்டர்களின் நடவடிக்கைகளைச் சிதறடிப்போம்!" என்பனபோன்ற சுலோகங்களை முழக்குங்கள்!"

உங்கள் தோழமையுள்ள,
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
கல்கத்தா யூனிட்.

கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்ட துண்டுப் பிரசுரம் ஒன்றின் நகல் இது. மக்களுக்கென விடுத்த வேண்டுகோள் என்று கட்சி கூறிக்கொள்கிறது:

"கொலைகாரர்களுக்குத் தக்க பதிலளியுங்கள்!"

கல்கத்தா நகரிலுள்ள வீரத் தொழிலாளர்களே! மாணவர்களே! பொதுமக்களே! தாய்மார்களே! சகோதரிகளே! கொலைகாரக் காங்கிரஸ் அரசாங்கத்தின் சிறைகளிலுள்ள வீரமிக்க கைதிகள் உண்ணுவிரதம் தொடங்கி இன்று ஒன்பது நாட்கள் ஆகின்றன. மரணவாயிலை நோக்கிக் கொஞ்சம் கொஞ்சமாகச் சென்று வரும் அவர்கள் பாஸிஸ அடக்குமுறைக்குத் தலைவணங்கவில்லை. நம் சுதந்திரத்திற்கும் சுகவாழ்வுக்குமான போராட்டத்திற்கு இந்தக் கைதிகளே தலைவர்கள். அத்தகையவர்களின் உயிர்களோடு பிதன் அரசாங்கம் விளையாடுவதை நாம் பொறுத்துக் கொண்டிருக்கமுடியாது. இந்த விரதம் மேற்கொண்ட கல்கத்தா நகரின் தாய்மார்களும், சகோதரிகளும் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற நிர்ப்பந்திக்குமாறு ஏப்ரல் 27-ந் தேதி தெருக்களிலே வந்தனர்.

உடனே காங்கிரஸ் அரசாங்கத்தின் போலீஸ், அவர்களின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. நான்கு பெண்களையும் இரண்டு மக்களையும் கொலை செய்துவிட்டு, தெருவில் கிடத்திச் சென்றது.

இதன் காரணமாக, கல்கத்தா வாசிகளின் புரட்சி மனம் கோபத்தால் கொதித்தெழுந்தது. தமக்குக் கிடைத்த பொருள்களையெல்லாம் எடுத்துக்கொண்டு கொடுமைமிக்க போலீசார்மீது அவர்கள் பாய்ந்தனர். 'சேவாதளம்' என்ற போர்வையில் உள்ள காங்கிரஸ் குண்டர்களையும் தாக்கினர். இவ்விதமாக, கல்கத்தா மாணவர்களும், பொதுமக்களும் அடக்குமுறைக்குத் தக்க பதிலளிக்கத் தொடங்கினர். பொதுமக்களின் இத்தகைய எதிர்ப்பைக் கண்டும், பிதன் மந்திரிசபையின் வெறிநாய்கள் ஏப்ரல் 20-ந் தேதியன்று மெடிக்கல் காலேஜின் எல்லைச்சுவருக்குள் புகுந்து, மாணவர்கள் மீதும், வழிப்போக்கர்கள்மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். பவ்பஜார், காலேஜ்தெரு ஆகியவை ஆயிரக்கணக்கான போலிசாரால் சூழ்ந்துகொள்ளப்பட்ட போதும், பொதுமக்களின் எதிர்ப்பு வலுத்துக்கொண்டே சென்றது. போராட்ட உணர்ச்சிமிக்க ஆயிரக்கணக்கான சுரண்டப்பட்ட மக்கள், போலிசாரைத் தாக்கி, தெருக்களில்அரண்களை அமைத்துக்கொண்டு, அரசாங்க பஸ்களுக்கும், டிராம்களுக்கும் நெருப்பிட்டனர். இவ்வாருக, கொலைச் செயலுக்குப் பதிலளிக்கப்பட்டது. கொலைகார அரசாங்கத்தை இந்த முறையில்தான் நிலைகுலையச் செய்யவேண்டும். புரட்சிகரமான இந்தப் போராட்டத்தில் கல்கத்தா தொழிலாளர்களும் முன்னணியில் நின்றனர். பார்க் சர்க்கஸ் டிராம் டெப்போவில் போலீசார் வசமிருந்த டி. மஜூம்தாம் என்னும் தங்கள் தலைவரைத் தொழிலாளர்கள் விடுவித்துக் கொண்டனர். அதேபோன்று நேஷனல் கார்பன் கம்பெனியைச் சேர்ந்த வீரத் தொழிலாளர்கள் போலீசாரிடமிருந்த தம் தோழர்களை விடுதலை செய்துவிட்டனர். நேற்றைய தினம் கல்கத்தாவிலும், அதையடுத்துள்ள பிரதேசங்களிலும் உள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கொலைகார பிதன் மந்திரியையும், காங்கிரஸ் முதலாளிகளின் அடக்குமுறையையும் ஒழிக்கக் கோரி ஹர்த்தால் அனுஷ்டித்தனர். இந்த லட்சியத்துக்காகத்தான் ஒவவொருவரும் தம் சக்தி கொண்ட மட்டும் போலீசை எதிர்த்துப் போராட வேண்டியிருக்கிறது. நேற்று நடந்த போராட்டத்தைப் பற்றிய செய்திகளை இன்று எல்லாப் பிரதேசங்களிலும் பரப்புங்கள். போலீஸ் உங்களைத் தாக்குவதற்குமுன், நீங்களே போலிசைத் தாக்குங்கள்! காங்கிரஸ் தளங்களைக் கொன்று குவியுங்கள்! ஒவ்வொரு தொழிற்சாலையிலும், பள்ளிக்கூடத்திலும் வேலைநிறுத்தம் செய்யுங்கள். நிர்வாகஸ்தர்களைச் சூழ்ந்துகொண்டு, ஒவ்வொரு தெருவிலும் ஊர்வலங்களை நடத்திச் செல்லுங்கள்!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்
கல்கத்தா (நகர்) யூனிட்.

— 3-ம் பக்கம் —

அதையெடுத்து நாம் சொல்லி அறிவுறுத்தப் போதுங்கால் அவர் கோதிக்கும் நிலைதான் என்னே?

பிதற்றல் வியாதிக்காரர்!

உண்மையை மறைத்துப் பேசுவதிலும், பிதற்றல் மொழியை அள்ளிக் கொட்டுவதிலும் நமது 'காம்ரேட்டு'களுக்கு இணை உலகத்திலேயே வேறு எவரும் இருக்க முடியாது. இந்த உண்மையை அவர்கள் பிறந்த நாளிலிருந்தே நிரூபித்துத்தான் வந்திருக்கிறார்கள். என்றாலும் இந்தத் தேர்தல் காலத்திலே இந்தப் பிதற்றல் வியாதி மிக மிக அதிகரித்திருக்கிறது. வியாதி முற்றி உயிர்போனாலும்கூட, அதில் அதிசயம் ஒன்றும் இருக்கமுடியாது.

அண்மையில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ராமமூர்த்தி ஈரோட்டில் பேசிய பேச்சு நமக்கு மேற்சொன்ன கருத்தைத் தெளிவுபடுத்துகிறது. அவர் அங்கு பேசிய பேச்சு உண்மையிலேயே பிதற்றல் வியாதிக்காரரின் பேச்சாகத்தான் இருந்தது. என்ன பேசுகிறோம் எதைச் சொல்லுகிறோம் என்ற எண்ணம் கூட இல்லாமல் பேசியிருக்கிறார் அவர். தி. மு. கழகத்தையும், அதன் ஒப்பற்ற தலைவர் அறிஞர் அண்ணா அவர்களையும் தப்புக் கணக்குப் போட்டுப் பார்த்திருக்கிறார்.

"முதன் மந்திரி காமராசருக்குத் திராவிட கழகத்தலைவர் ஈ. வே. ராமசாமிப் பெரியாரும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அண்ணாதுரையும் வலை வீசினார்கள். ஆனால், காமராசர், பெரியார் வலையில் சிக்கிக்கொண்டார். அதனால் ஆத்திரம் அடைந்த அண்ணாதுரை 'டெல்லி ஏஜண்டு' என்று காமராசரைத் தாக்கிப் பேசுகிறார்."

இது தோழர் ராமமூர்த்தியின் ஆத்திரம் கலந்த பேச்சு. என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, தோழர் ராமமூர்த்தி, இல்லாத ஒரு செய்தியை மிகத் துணிச்சலாக அள்ளி வீசியிருக்கிறார்.

காமராசர் அமைச்சர் பதவியை ஏற்றவுடன் எங்கெங்கெந்தக் கட்சிக்காரர்கள் அவரை வாழ்த்தினார்கள், வரவேற்றார்கள் என்பது நமக்குத் தெரியும். காம்ரேட்டுகளுக்குக்கூடத் தெரியும். பல கட்சித் தலைவர்களும் காமராசருக்கு வாழ்த்துத் தெரிவிக்க, அவரது வீட்டுக்குச் சென்ற செய்தியை நாம் நன்றாக அறிவோம். ஆனால் அந்த நேரத்திலே அறிஞர் அண்ணா அவர்கள், காமராசரைப் பார்க்கவோ, அவரைப் பற்றி எதுவும் சொல்லவோ இல்லை.

அண்ணா அவர்கள் நம்மைப் பார்க்கவில்லையே என்ற எண்ணத்தில், ஏன், ஓரளவு ஏக்கத்தால் அண்ணாவைத் தேடிக் காமராசர் ஓடோடிச் சென்றார். அண்ணாவைக் காமராசர் சென்று பார்த்தார். அண்ணா சென்று காமராசரைப் பார்க்கவில்லை. பாராட்டவுமில்லை. அரசியலில் கலந்துகொள்ளாமல் தானுண்டு, தன் வேலையுண்டு என்றிருக்கும் சாதாரண மனிதனுக்கே இந்த விஷயம் தெரியும். அப்படியிருக்க, அரசியலில் நெடுநாட்களாக இருக்கும் தோழர் ராமமூர்த்திக்கு இது தெரியாதது வேடிக்கைதான். 'காமராசருக்கு அண்ணா வலை வீசினார்' என்று குறிப்பிடுவது கருத்திழந்தவரின் பேச்சாகத்தான் இருக்கமுடியும்.

ஒரு உண்மையைச் சொல்லப் போனால், அறிஞர் அண்ணா அவர்களை வலை வீசிப் பிடிக்க முற்பட்டவர் காமராசர்தான். இதை யாரும் மறுக்கமுடியாது.

சென்ற பொதுத் தேர்தலிலே 'காம்ரேட்'டுகளும் வலை வீசத்தான் முயன்றார்கள். ஆனால் இயலவில்லை. இதை, அதற்குள் மறந்துவிடவும் நியாயமில்லை. என்றாலும் அதை மறந்து, ஒரு மாபெரும் நிகழ்ச்சியையே மறைத்துப் பேசி வருவது தங்கள் கட்சிக்குப் பழக்கப்பட்ட வேலை என்பதை நிரூபித்து வருகிறார் தோழர் ராமமூர்த்தி. வலை வீசும் வேலை 'காம்ரேட்டு'களுக்கு இருக்கலாம். ஏனென்றால் அவர்கள் 'வலை'க்குள்ளேயும், அண்டர்கிரவுண்டுக்குள்ளேயும் இருந்து பழக்கப்பட்டவர்கள். வலைக்குள்ளே இருந்து வலை வீசிப் பழகிய அந்த மந்த மதியினருக்கு உலக நடவடிக்கைகள் எதுவும் புரியாது. குறுகி, கூனி குவலயமறியாத தவளைகளாக வாழ்ந்தவர்கள் அவர்கள். எனவேதான் தி. மு. கழகத்தைப் பற்றித் தவறான முடிவுக்கு வருகிறார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் சாதாரணமாக யாரையும் பாராட்டிவிடமாட்டார்கள் என்பது அவர்களுடன் பழகியவர்களுக்குத்தான் புரியும். வேற்று முகாமிலே இருந்துகொண்டு, பொறாமை என்னும் கருப்புக் கண்ணாடியை அணிந்துகொண்டு, 'பலாத்காரம்' என்ற ஆயுதத்தைக் கையிலே வைத்துக்கொண்டு வாழும் 'காம்ரேட்'களுக்கு அண்ணாவின் சீரியதன்மை தெரியாது. தி. மு. கழகத்தின் தனித்தன்மை புரியாது. தனக்குத் தெரியாவிட்டால் பேசாமல் இருந்து கொள்ளலாம். அது பெருந்தொண்டு. அப்படியிருக்க விருப்பமில்லாவிட்டால், "ஐயா! எனக்குத் தெரியாது! யாராவது விளக்கிச் சொல்லுங்கள்" என்று வெட்கத்தை விட்டுக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். இந்த இரண்டையும் விட்டு விட்டு, தாறுமாறாகவும் தவறான முறையிலும் பேசுவது விவேகமுள்ளவர்களின் செயலாக இருக்கமுடியாது.

காமராசரை வலை வீசவேண்டும் என்ற நிலையோ, அவரைப் புகழ வேண்டும் என்ற எண்ணமோ தி. மு. கழகத்துக்கு நிச்சயமாகக் கிடையாது. ஊசி தங்கத்தால் செய்ததுதான். அதற்காக, அதைக் கொண்டு கண்ணில் குத்திக் கொள்ளமுடியுமா? இந்தத் தத்துவத்தை நன்றாக அறிந்தவர்கள் தி. மு. கழகத்தார். ஆச்சாரியாரை அகற்றிவிட்டு, 'பச்சைத்தமிழர்' ஆட்சியில் ஏறியிருக்கிறார் என்பதற்காக, அவரை தி. மு. கழகமோ, அதன் ஒப்பற்ற தலைவர்களோ ஆதரித்துவிடவில்லை. எத்தனையோ மேடைகளில் 'தெளிவற்ற நெஞ்சினருக்கு' தெளிவுறத்தியாகிவிட்டது இந்த விஷயத்தை! இருந்தாலும் தெரியவில்லை என்பதைத் தெளிவுபடுத்துகிறார் தோழர் ராமமூர்த்தி.

எதற்கெடுத்தாலும் 'கோயபல்ஸ் பிரச்சாரம்' என்று பேசும் 'காம்ரேட்டு'களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். தோழர் ராமமூர்த்தி பேசிய இந்தப் பேச்சு எந்த ரகத்தைச் சேர்ந்தது? கோயபல்ஸ் பிரச்சாரம்கூட அல்ல இது! அதற்கும் மீறிய ஒன்று.

தாங்கள் சொல்வதே நியாயம், தாங்கள் செய்வதே சரி என்ற எண்ணம் நமது 'காம்ரேட்டு'களிடம் ஊறிப்போயிருக்குமானால், உண்மையிலேயே நாம் பரிதாபப்படுகிறோம் அவர்களது நிலைமையைப் பார்த்து.

ரஷ்ய 'மந்தையை'ப் பின் தொடர்ந்து செல்லும் இந்தியத் துணைக்கண்டத்து 'மந்தை'களுக்கு எத்தனை சொன்னாலும் புரிவதில்லை. ரஷ்யா ஒருவரைக் குறை கூறினால் இந்தியக் 'காம்ரேட்டு'களும் குறை கூறுவது; குறைகூறிய குறைமதியினர், குறையை மாற்றிப் புகழ்பாட ஆரம்பித்தால், இந்தியக் 'காம்ரேட்டு'களும் அதே வேலையைச் செய்வது. வேலை பார்ப்பது ஒரு இடம்; ஆனால் வேலை செய்ய விரும்புவது இன்னொரு இடம்! ரஷ்யக் காதல்கொண்ட நமது 'காம்ரேட்டு'கள், இங்கிருந்து கதறுவதன் மர்மம் தெரியவில்லை. ரஷ்ய நாட்டுக்கு இந்த நாட்டை அடிமையாக்கிக் கொடுக்கவேண்டும் என்ற ஈன எண்ணம் கொண்டவர்கள்தான் இவர்கள். மற்றவர்களைக் கண்டபடி திட்டுவது வேடிக்கையைத்தான் தருகிறது.

சொந்த நாட்டை வேற்று நாட்டாருக்கு அடிமையாக்கிவிடத் துடிதுடிக்கும் காம்ரேட்டுகள் அகில இந்திய ரீதியைப் பேசி வருவது விந்தையில்லைதான். தமிழகத்துக்கு, இவர்களால் எந்த விதமான நன்மையும் கிடையாது. திராவிட நாடு என்ற கோஷத்தைச் சொன்னவுடன், இந்த 'காம்ரேட்டு'களுக்குப் பிடிப்பதில்லை. ரஷ்ய நாட்டையே சதா கனவு கொண்டிருக்கும் தோழர்களுக்கு திராவிட நாடு பற்றி என்ன விளக்கினாலும் தெரிவதில்லை. திராவிட நாடு பிரிவினை கோஷம் அர்த்தமற்றது என்று கதைக்கும் நமது 'காம்ரேட்டு'களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறோம். தற்போது ஆந்திர நாட்டில் கூட 'திராவிட நாடு வேண்டும்' என்கிற உணர்வு எழுந்திருப்பதை 'காம்ரேட்டு'களுக்கு உணர்த்த விரும்புகிறோம். சமீபத்தில் ஆந்திர அமைச்சர் கோபால ரெட்டி பேசிய பேச்சைக் கீழே கொடுத்திருக்கிறோம்:

"மத்திய சர்க்கார் சபைகளில் தென்னாட்டு மக்களது செல்வாக்கினை உணர்த்த, அவர்கள் தங்களிடை உள்ள மொழி வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டாக வேண்டும்."

"இந்த ஒற்றுமை ஏற்பட்டாலன்றி தென்னாடு, வடநாட்டிற்கு எதிராகத் தன்னைக் காப்பாற்றிக் கொள்வது முடியாது போய்விடும்!"

இப்போது என்ன சொல்லுகிறார்கள் நமது தோழர் ராமமூர்த்தியும், அவரது சகபாடிகளும்? தொழிலாளர் என்ற வாசகம் எங்கே கேட்டாலும் உடனே அங்கே ஓடி, தனக்கும் தொழிலாளருக்கும் உறவு அமைத்துக்கொண்டு, தேர்தலுக்கு ஓட்டுக் கேட்க வந்துவிடுவார்கள். இதைத் தவிர, காம்ரேட்டுகள் சாதித்தது என்ன? 'உலகத் தொழிலாளியே என் மச்சான்தான்' என்று சொல்லிக் கொள்வதைத் தவிர 'காம்ரேட்டு'கள் என்ன கண்டார்கள்? அர்த்தமற்ற தங்களது செயல்களை எல்லாம் விட்டுவிட்டு, பொறுப்பும், கண்ணியமும் உள்ள தி. மு. கழகத்தைக் குறைவாகப் பேசிவருகிறார்கள்.

தொழிலாளர் என்றால் உடனே வலைவீசி, அவர்களைத் தங்கள்பக்கம் இழுப்பது; இழுத்த இழுப்பக்கு அவர்கள் வராவிட்டால் ரஷ்ய சுத்தியலையும், அரிவாளையும் தூக்குவது! இந்தச் செயலையே தங்கள் வாடிக்கையாகக் கொண்டுள்ள நமது 'காம்ரேட்டு'கள் காமராசருக்கு நாம் வலை வீசினோம் என்று வாயளப்பு அளக்கிறார்கள். உண்மையில் வலைவீசிகள் யார்என்பதை அவர்களது செயல்களே நிரூபித்து வருகின்றன.

—தமிழ்ப்பித்தன்

தி. மு. க. — தேர்தல் பிரச்சார

சிறப்பு மாநாடு

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்
பிப்ரவரி 10-ந்தேதி ஞாயிறன்று
நடைபெறும்

★

பொதுச்செயலாளர்
இரா. நெடுஞ்செழியன்
அவர்கள் தலைமை தாங்குவார்.

★

- ★ நாட்டுக்கு நல்லாட்சி
- ★ சர்வாதிகாரத்தின் எதிர்காலம்
- ★ காங்கிரஸ் ஆட்சியின் ஊழல்கள்
- ★ தி. மு. கழகமும் பொதுமக்களும்
- ★ தேர்தல் பிரச்சார முறைகளும் தன்மையும்

என்பதைப்பற்றி

அண்ணா

என். வி. நடராசன்	ஈ. வெ. கி. சம்பத்
மு. கருணாநிதி	சி. பி. சிற்றரசு
கே. ஏ. மதியழகன்	சத்தியவாணிமுத்து
க. அன்பழகன்	காஞ்சி-கல்யாணசுந்தரம்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி	நாஞ்சில் மனோகரன்

ஆகியோரின் விளக்க உரைகள்

இரவு 10 மணிக்கு — நாடகம் உண்டு

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

பாதி பாதி!

சென்ற ஐந்தாண்டு சட்டசபையில் அதிக நேரம் பேசியது எதிர்க்கட்சித் தலைவர் ராமமூர்த்தி.

—ஜனசக்தி.

போகட்டும், போகட்டும்! இந்தப் பெருமையாவது இருக்கட்டும்!

—ஒரு யதார்த்தவாதி.

★

காங்கிரஸ் கட்சி அபேட்சகரைப் பொறுக்கிய விஷயத்தில் தவறுகள் இருக்கலாம். ஆனால் முடிவு செய்தபின் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ள வேண்டும்.

—நேரு பண்டிதர்.

கண்ணிருந்தும் யார் போய் கிணற்றில் விழுவார்கள்?

—ஒரு ராஜீனாமாக்காரர்.

★

களத்துமேட்டிலிருந்து நெற்கூலக் கிசான்கள் தூக்கிச் சென்றனர்.

—பத்திரிகைச் செய்தி.

மேற்படி கிசான்கள் தமது காம்ரேடுகளின் 'சொற்பொழிவை' எங்கேயாவது கேட்டுத் தொலைத்தார்களோ?

—ஒரு சந்தேகி.

★

உலகின் அறைகூவலைச் சமாளிக்கவல்லது காங்கிரசே.

—நேரு பண்டிதர்.

உலகில் பல உறுப்பினர்களின் ராஜீனாமாக்களையும் சமாளிக்க வல்லது காங்கிரசே.

—அவர் சொல்லாதது.

★

பத்து ஏக்கர் நிலம் மட்டும் போதாது; ரூ. 5000 ரொக்கமும் வேண்டும் என்று கோவை தியாகிகள், உண்ணாவிரதமிருக்கிறார்கள்.

—பத்திரிகைச் செய்தி.

இருக்க இடம் கொடுத்தால் படுக்கப் பாய் கேட்பது இயல்புதானே!

—விஷயமறிந்தவர்.

★

பயிற்சி பெறாத ஆசிரியர்களை நிரந்தர ஆசிரியர்களாக்க யோசனை செய்கிறோம்.

—பக்தவத்சலம்.

அடிசக்கே! இதுவும் தேர்தல் 'ஸ்டண்ட்'தானோ?

—ஒரு நல்லவர்.

★

நீதிக்கமிஷனின் சென்னை விஜயம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

—பத்திரிகைச் செய்தி.

நீதிக்கமிஷனின் நிதி நிலைமை சரியில்லையோ?

—ஒரு கிண்டல் பேர்வழி.

★

கண்டம் விட்டுக் கண்டம் சென்று தாக்கும் பயங்கர ஆயுதங்கள் தயார் செய்வதில் அமெரிக்கா பின்தங்கியிருக்கிறது.

—சோவியத் கம்யூனிஸ்டுப் பத்திரிகை.

இப்படி விஷயங்களிலெல்லாம் கம்யூனிஸ்டு நாட்டைப் போல் மற்ற நாடுகள் முன்னேறி நிற்க முடியுமா?

—விஷயம் அறிந்தவர்.

★

பி. ஸி. ஜியால் கெடுதல் இல்லை என்று உலக நிபுணர்கள் திட்டமாக அறிவித்திருக்கிறார்கள்.

- பத்திரிகைச் செய்தி.

தயவு செய்து இந்தச் செய்தியை ஆச்சாரியாரின் காதில் போடுங்கள்.

— ஒரு அனுபவசாலி.

★

அபேட்சகர் ஜாபிதா திரும்பவும் பரிசீலிக்கப்படமாட்டாது. அனைவரையும் திருப்தி செய்வதென்பது ஆகாத காரியம்.

— தேபர்.

போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

— ஒரு போட்டி நிபந்தனை.

★

காங்கிரஸ் தேர்தல் பிரச்சாரம் செய்துகொண்டிருந்த மொரார்ஜி தேசாய்மீது கல்வீச்சு.

- பத்திரிகைச் செய்தி.

காங்கிரஸ் ஆட்சியில் பால் ஓடும் தேன் ஓடும் என்ற பழைய பல்லவியைத் திரும்பவும் சொல்லியிருப்பாரோ?

— ஒரு கேள்விப்பிரியர்.

★

காங்கிரசில் லஞ்சமும் ஊழலும் மலிந்துவிட்டன.

- புதிய ராஜீனாமாக்காரர்.

இன்றுதானா? நெடுநாட்களாக.

—பழைய ராஜீனாமாக்காரர்.

★

சட்டசபையை மக்கள் கருவியாக மாற்றியது கம்யூனிஸ்டுகள் தான்.

— ஒரு காம்ரேட்.

நீங்கள் எதைத்தான் 'கருவி' யாக மாற்றவில்லை?

— விஷயம் புரிந்தவர்.

போன் No- 226.

ஷேக் ஷூ மார்ட்,

பழனி.

கை தேர்ந்த ஆட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் மிகச் சிறந்த மிதியடிகளும், ஷூஸ்களும், கவர்ச்சியூட்டும் டிசைன்களில் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

பிளாக்ஸ் & பாட்டா ஏஜண்ட்

உரிமையாளர்.

ராம் ரேடியோ சர்வீஸ்

டீலர்ஸ் அண்ட் இஞ்சினீயர்ஸ்,

புதுக்கோட்டை

பி லி ப் ஸ்

- ரேடியோ
- ஒலிபெருக்கிக் கருவி
- இன்பிராபில் லாம்ப்
- பிலி ஷேவிங் செட்

முதலியவைகள் கிடைக்கும்.

★ விழாக் காலங்களில் ஒலிபெருக்கிகள் சிறந்த முறையில் அமைத்துக் கொடுக்கப்படும்.

★ ரேடியோக்கள் ஒலிபெருக்கிகள் முதலியவைகள் மிக நல்ல முறையில் சர்விஸ் செய்து தரப்படும்.

— விவரங்களுக்கு: —

ராம் ரேடியோ சர்வீஸ்

தபால் பெட்டி நெம்பர் 2.

தியாகராஜ வீதி : : புதுக்கோட்டை

நன்மணம் சேர்க்கும் நலமதனைத் தான்நல்கும் அண்ணா பத்தியென்றே அறி!

பழநி, ஆர். எம். கே. வேலுசுவாமி

சித்த வைத்தியசாலை.

57 வருட அனுபவம் பெற்றது

தீராத கொடிய வியாதிகளையெல்லாம் தீர்த்து பல்லாயிரக்கணக்கான நற்சாட்சிகள் பெற்று இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நிகரில்லாப் புகழ் பெற்றது.

பெண்களுக்கு ஓர் வரப்பிரசாதம்

சூதக சம்பந்தமான சகல குற்றங்களும் நீங்கி புத்திர சந்தானம் உண்டாக பழநி ஆர். எம். கே. கெற்ப சஞ்சீவி எண்ணெ சாப்பிடுங்கள்.

பெண்களுக்கு மாதாந்திரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்றுவலியை அந்த க்ஷணமே நிறுத்தும். எந்த மருந்திலும் தீராத எவ்வளவு நாட்பட்ட சூதக வயிற்றுவலியும், சூதக சிக்கலும் இதில் அவசியம் தீரும். காலாகாலத்தில கிரமப்படி பஹிஷ்டையாகும். கெற்பப் பையிலுள்ள 6-வித குற்றமும் தீர்ந்து கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும். அனுபவத்தில் கைகண்டது. சூதகவயிற்றுவலி இருக்கும் வரை கெற்பம் தரிக்காது. மேற்படி வலி தீர்ந்து கெர்ப்பம் தரிக்க வேண்டுமானால், பழநி, ஆர். எம். கே. வேலுசுவாமி கெற்ப சஞ்சீவி எண்ணெ சாப்பிடுங்கள்.

தபால் செலவு உள்பட ரூ. 7-10-0.

தங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி! விபரமாய் எழுதுங்கள். கேட்லாக் இனாம்.

பிரதம வைத்தியர் and மானேஜர்:—சித்த வைத்தியக் களஞ்சியம் ஆர். எம். கே. சிவசுப்ரமண்ய ஒப்.

ஆர். எம். கே. வேலுசுவாமி, சித்த வைத்தியசாலை,

தபால் பெட்டி நெ. 16, (டெலிபோன் நெ. 219) பழநி. (S.I.)

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127 மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு